Registered at the G. P. O. as a Newspaper
வாரப்பதிப்பு விலை சதம் 15

சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality BLOCK MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

# ஈழநாடு

மலர் 7 | EELA NADU | இதழ் 219
தேசிய தினசரி | National Tamil Daily
விசுவாவசு புரட். 3 ஜ: அவ் பிறை 22 (19-9-65) ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
... வீதி கொழும்பு

இந்தியாவுக்கு

# அமெரிக்க ஆயுத உதவி மீண்டும் ஆரம்பமாகும்?

## சீனாவின் எச்சரிக்கையை தொடர்ந்து வாஷிங்டன் பரிசீலனை

### பீகிங் குறிப்பு பற்றி மேலும் பல நாடுகள் கவலை

வாஷிங்டன், செப். 18

சீன தாக்குதல் நடத்தியதில் நிறுத்தப்பட்ட அமெரிக்க ஆயுதங்களை மீண்டும் வழங்கவேண்டுமென்று இந்தியா அமெரிக்காவிடம் கோரியிருப்பதாயும், அமெரிக்கா இதை இப்போது பரிசீலித்துக்கொண்டிருப்பதாயும் வாஷிங்டனிலிருந்து கிடைக்கும் ராய்ட்டர் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் ஐ நாவிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு கோல்ட்பர்க், ஐ நா விலுள்ள ரஷ்யப் பிரதிநிதியுடன் இந்தியாவுக்கு சீன விடுத்திருக்கும் எச்சரிக்கைபற்றி ஆலோசனை நடத்தினர்.

அதேசமயம் ஐ நா பாதுகாப்புச்சபை அங்கத்தினர்கள் சீன எச்சரிக்கையின் ராணுவ, அரசியல், ராஜதந்திர விளைவுகள் பற்றி இப்போது தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சிக்கிம் மகாராஜா சீன எச்சரிக்கை சம்பந்தமாக திரு. சாஸ்திரியின் அறிக்கையை வரவேற்றிருக்கிறார். ''நாங்கள் சமாதானத்தை விரும்புகிறோம் ஆனால் யுத்தம் எங்கள்மீது திணிக்கப்பட்டால் கடைசிவரை எதிர்த்துப் போராடுவோம்'' என அவர் கூறினார்.

இந்தோ—பாகிஸ்தான் யுத்தத்தில் மூன்றாவது நாடு ஒன்று தலையிடுவதை ஜப்பான் எதிர்க்கிறது என டோக்கியோவில் வெளிவிவகாரக் காரியாலயம் அறிவித்திருக்கிறது.

பீகிங்கின் எச்சரிக்கைகுறித்து பிரெஞ்சு அரசாங்கம் இப்போது ஆராய்ந்து வருவதாகவும் பாரிஸ் செய்திகள் கூறுகின்றன

இந்தோ பாகிஸ்தான் யுத்தம் சம்பந்தமாக ரஷ்யா கடைப்பிடிக்கும் கொள்கையை பீகிங் ரேடியோ கண்டனஞ் செய்திருக்கிறது.

### சீனப் பத்திரிகை குற்றச்சாட்டு

பீக்கிங், செப். 8

அமெரிக்காவின் தூண்டுதலினாலேயே இந்தியா, பாகிஸ்தானுக்கெதிராக படையெடுத்துள்ளதாகவும் திரிபுவாத ரஷ்யாவும் இதற்கு ஆதரவு அளிப்பதாகவும் பிரபல சீனப்பத்திரிகையான 'பீப்பிள்ஸ் டெய்லி' செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளதாவது:

இந்தியா நடு நிலைமை நாடு எனவும் சமாதானத்தை விரும்பும் நாடு எனவும் ரஷ்யத் தலைவர்கள் கூறுகிறார்கள் ஆனால் இந்தியா இவற்றையெல்லாம் கைவிட்டுவிட்டது சீனாவுக்கெதிரான இயக்கத்தை இப்போது இந்தியா நடத்திவருகிறது'

இந்தியா தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தி விட்டால் சமாதானம் வெகு இலகுவில் நிலைத்துவிடும் என்றும் 'பீப்பிள்ஸ் டெய்லி' தெரிவித்துள்ளது

### 36,500 பேர் ராணுவத்தில் சேர்க்கப்படுவர்

வாஷிங்டன், செப் 8

அமெரிக்காவின் கட்டாய ராணுவப் படைச் சட்டத்தின்கீழ் வரும் நவம்பரில் 36,500 ராணுவத்தில் சேர்க்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது

## 1000 ரூத்தல் குண்டு பாகிஸ்தான் பிரயோகித்தது

புதுடில்லி, செப். 18

இன்று அதிகாலை அம்பாலாவில் பாகிஸ்தானியர் குண்டுகளை வீசியதில் ராணுவ ஆஸ்பத்திரி ஒன்று பெருத்த சேதத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரியிலிருந்த 15 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயமுற்றனர். அம்பாலாவுக்கருகிலுள்ள இடத்தில்குண்டு வீச்சுக்கு 4 பேர் பலியாகினர். 15 பேர் காயமுற்றனர்.

இந்த குண்டுவீச்சில் பாகிஸ்தான் விமானப்படை 1000 ரூத்தல் குண்டுகளை உபயோகித்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. அம்பாலா பகுதியில் வெடிக்காத 1000 ரூத்தல் குண்டு கண்டெடுக்கப்பட்டது.

ஃ

ராவல்பிண்டி, செப். 18

சியால்கோட் பகுதியில் சென்ற 48 மணி நேரத்தில் நடைபெற்ற பெரும்தாக்குதலில் 87 இந்திய டாங்கிகளை பாகிஸ்தான் சேதப்படுத்தியதாக பாகிஸ்தான் தலைமைக்காரியாலயம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயகா

### விமானநிலையத்தில் மேலும் வசதிகள்

பம்பலப்பிட்டி, சனி

இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் காரணமாக வெளிநாட்டு விமானங்கள் இந்தியா, பாகிஸ்தான் மூலம் செல்லாமல் இலங்கை கட்டுநாயக்கா மூலம் செல்வதால் அதிக பிரயாணிகள் இங்கு தங்கிச் செல்லவேண்டியிருப்பதால் இவர்களுக்கு போதிய வசதிகள் அளிக்க போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. குருளே நடவடிக்கைமேற்கொண்டுள்ளார்

## உலக யுத்தமா?

## 24 மணிநேரம் பயங்கர கண்டம்

### நிலைமை குறித்து இலங்கை கவலை

— நமது கொழும்பு நிருபர் —

கொழும்பு, சனி

இன்னும் 24 மணித்தியாலங்களுக்குள்ளாக 3-வது உலக யுத்தமொன்று ஏற்பட்டுவிடுமா என்பது குறித்து உலக நாடுகளெல்லாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன. இந்த நாடுகளுள் இலங்கையும் ஒன்று.

இந்தியாவுக்கு சீன விடுத்திருக்கும் எச்சரிக்கையின் கெடு திங்கட்கிழமை காலையுடன் முடிவடைகிறது. இந்த முடிவு ஏற்பட்டதும் சீன இந்தியாவுக்கெதிரான போரை நடத்தவிருக்கிறது. இவ்வித போரில் சீன இறங்கினால் அதை எதிர்ப்பதற்கு இந்தியாவும் தயாராகவிருக்கிறது. உலக வல்லரசுநாடுகளில் இரண்டான அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்த நிலைமை குறித்து மிக்க அக்கறை கொண்டுள்ளன. இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தைப் பயன்படுத்தி உலக அமைதியை ... வந்தால் அமெரிக்கா ... கொடுப்பதற்கு அமெரிக்கா தயாராகிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள இந்திய ஹைகமிஷனர் சீனவினது எச்சரிக்கை பற்றி அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்குடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சீன இந்தியாவுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை இன்னும் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லையென அறியப்படுகிறது. நிலைமை மோசமடைந்துவிடுமா என்பதில் அக்கறை கொண்டுள்ள வெளிவிவகார இலாகா அதிகாரிகள் உத்தியோகபூர்வமான தகவல்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் இந்தியா இதுசம்பந்தமான தனது கொள்கையை இலங்கை அரசாங்கத்துக்கு தனது ஹைகமிஷனர் மூலமாக விளக்கியிருப்பதாக அறியப்படுகிறது

இந்திய, சீனப்பிரதமர்களுக்கிடையில் நடைபெற்ற கடிதப்போக்குவரத்து தகவல்கள் இலங்கை அரசாங்கத்துக்குக்கிடைத்திருப்பதாக அறியப்படுகிறது

சிக்கிம் எல்லையில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே மோதுதல் ஏற்பட்டால் அது இலங்கையை வெகுவாகப் பாதிக்கலாம் என இலங்கை அரசியல் வட்டாரங்கள் கவலைகொண்டுள்ளன ஏனெனில் உலக நாடுகளின் கவனம் தென் கிழக்காசிய பிராந்தியங்களிலுள்ள விமானத்தளங்கள் கடற்படைத்தளங்கள் ராணுவத்தளங்கள் போன்றவைகளில் முக்கிய கவனம்

(10-ம் பக்கம் பார்க்க)

### புதிய காரியதரிசி

காங்கேசன்துறை, சனி

கடந்த இரு வருடமாக காரியதரிசிஇல்லாது இயங்கி வந்த காங்கேசன்துறை பட்டினசபைக்கு இம்மாதம் முதல் திரு செல்வரத்தினம் என்பவர் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ் கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் ஒலிபரப்பு சேவை: 14

# சாருகேசிக்குச் சோதனே!

— வி. என். பி.

வானொலிக் கலைஞர்களை 'ஸ்பெஷல் கிரேட்', ஏ கிரேட், பி கிரேட், ஸி கிரேட் என்று தரம் பிரித்து வைத்திருக்கிறார்கள். இந்த தரம் பிரிக்கும் முறையையிட்டு கலைஞர்களுக்கிடையே காய்ச்சல் உண்டு. ஒவ்வொருவரும் தாம் தாம் சிறந்த கலைஞர் என்று நினைத்துக் கொள்வது சங்கீதக்காரருடைய சுபாவம். 'என்னை பி கிரேட்டில் போட்டுவிட்டு அவருக்கு மட்டுமென்ன ஏ கிரேட்' என்று சந்தேகிப்பவர்கள் பலர். அந்தச்சந்தேகத்தை பெட்டிசங்கள் மூலமாகவும் மொட்டைக்கடிதங்கள் மூலமாகவும் வெளியிடுவார்கள். நிலையத்தில் வேலை செய்பவர்கள்தாம் தங்களை இவ்விதம் அவமானப்படுத்துகிறார்கள் என்று அவர்கள் மீது வசை பாடுவார்கள்.

ஒரு சமயம் நான் ரயிலில் பிரயாணம் செய்த போது என்னுடன் கூட வானொலிக் கச்சேரிக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு பிரபலநாகசுரக்காரரும் வந்தார். வானொலி விஷயங்களைப் பற்றிப்பேசிக் கொண்டிருந்தபோது அவர் என்னிடம் ஒரு விண்ணப்பத்தைத் தெரிவித்தார். 'தம்பி, நீங்கள் என்னை எந்த கிரேட்டில்வேண்டுமானாலும் போடுங்கள். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அவரையும் (இன்னொரு பிரபல நாகசுரக்காரரின் பெயரைச் சொல்லி) அதேகிரேட்டில் போட்டுவிடுங்கள். அவருக்குக் கீழ் கிரேட்டில் என்னைப் போட வேண்டாம், என்று மிகவும் விநயமாக வேண்டிக்கொண்டார்.

சில கலைஞர்கள் தங்களை உயர்ந்த கிரேட்டில் போடவில்லையென்று கோபம் கொண்டு வானொலியை சில காலம்பகிஷ்கரிப்பதுமுண்டு. இவர்கள் வானொலியில் பாடாவிட்டால் வானொலிக்கும் சங்கீத உலகிற்கும் சொல்ல முடியாத நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பது அவர்களுடைய எண்ணம் போலும்! மிகவும் நன்றாகப் பாடக்கூடிய ஒருவர் இன்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறார். இவர் என்னுடன் நன்றாகப்பழகியவராதலினாலும், அவருடைய கச்சேரிகளை வானொலி ரஸிகர்கள் கேட்க வேண்டுமென்று நான் விரும்பியதாலும், அவரைப் பல முறைகள் சந்தித்து 'ஆடிஷனுக்கு' வரும்படி அழைத்தேன். அவர் ஒப்புக் கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை. எடுத்த எடுப்பிலேயே தம்மை ஏ கிரேட்டில் போடவேண்டுமாம்! அவர் இன்று வரை இலங்கை வானொலியில் பாடாமலிருப்பது எனக்கு மிகவும் துக்கம்.

கலைஞர்களைத் தரம்பிரிப்பதில் இவ்வளவு கஷ்டங்கள் இருப்பதைக் கருதி இந்தியாவிலிருந்து பேராசிரியர் ஆர். ஸ்ரீநிவாஸனை ஒப்பந்தம் செய்துதருவித்து வானொலிக் கலைஞர்கள் எல்லோரையும் தரம்பிரிக்கத் தீர்மானித்தோம். புரபெஸர் ஸ்ரீநிவாஸன் சங்கீதப் பேராசிரியர் அல்லாவிட்டாலும் கர்நாடக சங்கீதத்தில் நிரம்பிய ஞானமும் அறிவும் பெற்ற முதியவர். நன்றாக காலக்ஷேபம் நிகழ்த்துவார்.

இலங்கை வானொலியில் கடமையாற்றிய போதிலும் நானும் ஒரு வானொலிப் பாட்டுக்காரன். ஆனால் நிலையத்தில் வேலை பார்க்கிறவன் என்ற முறையில் என்னுடைய பாட்டுக்கு சன்மானம் எதுவுமில்லை. இருந்தபோதிலும் என்னையும் தரம் பிரிப்பதற்கு அழைத்தார்கள். நான் இந்த 'ஸ்பெஷல் ஆடிஷனில்' பங்கு பற்றுவதற்கு முதல் நாளிரவு பேராசிரியர் ஸ்ரீநிவாஸன் சங்கீதத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் ஒலிபரப்பியிருக்கிறார். என்னுடைய துரதிர்ஷ்டம், நான் அந்தப் பிரசங்கத்தைக் கேட்கவில்லை. அவர் அந்தப் பிரசங்கத்தில் பின் வருமாறு கூறியதாக எனது 'ஆடிஷனுக்கு'ப் பிறகுதான் அறிந்தேன்.

'சாருகேசி மேளராகந்தான். ஆனால் அதை ராக விஸ்தாரம் செய்வதானால் அதனுடைய தனி ஸ்வரூபம், பாவம் என்ன என்றறிய வேண்டும். அதன் ஸ்வரங்களை மட்டும் வைத்துக் கொண்டு விஸ்தாரம் செய்தால் வீண் சப்தஜாலமாகும். ஜீவனில்லாத சாவி போலிருக்கும். இல்லாமற் போனால் ஏதோ ஒரு அவியல் போலிருக்கும். சங்கரதோடியாகத் தீரும். கீழே சங்கராபரணமும் மேலே தோடியுமாகப் பாடி இவை இரண்டையும் பஞ்சமத்தில் ஒட்ட வைப்பது சாருகேசியாகாது. மேற்கூறியபடி அது சங்கர தோடியாகும்.'

அடுத்தநாள் காலையில் என்னுடைய முறை வந்தது. அக்காலத்தில் 'க்ருபயா பாலய சௌரே' என்றஸ்வாதித் திருநாள் கிருதி மிகவும் பிரபலமாயிருந்தது. நான் சாருகேசி ராகத்தை விளாசித் தள்ளி இந்தக்கிருதியையும் பாடினேன். 'ஆடிஷன்' முடிவுகள் வெளிவந்தபோது நான் ஏ கிரேட்டிலிருந்து பி கிரேட்டுக்குத் தள்ளப்பட்டு விட்டேன்!

பேராசிரியர் ஸ்ரீநிவாஸனுக்கு சாருகேசி ராகத்தில் இவ்வளவு 'பிறெஜூடிஸ்' இருக்குமென்று தெரிந்திருந்தால் அதே ராகத்தைப்பாட நான் என்ன முட்டாளா?

(தொடரும்)




அயராது உழைக்கும் அப்பாவுக்கு
விசேஷமாக கொடுக்கச் சிறந்தது
மாமைட்

அனுதினமும் நெற்றி வியர்வை சிந்தி, வயலில், உற்பத்திசாலையில், தொழிற்சாலையில், அல்லது காரியாலயத்தில் உழைக்கும் அவருக்கு நிரம்பிய பலமும் சக்தியும் அவசியம். ஆகவே அவருக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவரை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

1 சிறி 9000 வரிசையிலுள்ள N. U 50 CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. றேடியோ என்ஜினியர்ஸ், 76, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1041

ஒஸ்டின் கேம்பிறிஜ் டிலிவறி வான்33 சிறி 1780 உன்னதநிலையில். கே. ஆர் லிங்கம் மில்ஸ், 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 1037

### கல்வி

வடஇலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 4-10-65 விஜயதசமியன்று பி. ப. 4-30 மணி தொடக்கம் பொதுக்கலைத்தேர்வு வகுப்பு ஆரம்பிக்கப்படும். திறமையும் அநுபவமும் உள்ள விரிவுரையாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ர். விண்ணப்பங்கள் 1-10-65க்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். செ. சிவப்பிரகாசம், பொறுப்பாளர், ஸ்ரீ கணேச வித்தியாலயம், சரசாலை. 1042

### EDUCATIONAL

Applications accepted for Admission to G. C. E. advanced level arts/ Science. United Institutes. Nelliady, Karaveddi / 107 Point Pedro Road, Nallur Jaffna. 979

Only few vacancies exit in our G. C. E. Ordinary level Arts / Science / Commerce classes, Enrol without delay. United Institutes, Nelliady, Karaveddi / 107 Point Pedro Road, Nallur, Jaffna. 978

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

பண்டத்தரிப்பு கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கங்களின் சமாசக் கைத்தறி நிலையத்திற்கு நெசவுஆசிரிய கலாசாலையில்பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம்: மாதம் ரூ. 150/- (எல்லாமுட்பட) இத்துடன் தறிகளில் வேலை செய்வதற்குப் பயிற்சியும் அனுபவமுமுள்ள பெண்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் தலைவர், பண்டத் தரிப்பு ப. நோ. கூ. ச. சமாசம், பண்டத் தரிப்பு என்ற முகவரிக்குப் பதியப்பட்ட கடிதத்தில் 30-9-65 க்கு முன் அனுப்பப்படவேண்டும். 1039

### தேவை

கைத்தறிகளில் வேலை செய்வதற்கு பயிற்சியுள்ள பெண்கள் தேவை. யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெரு 25-ம் இலக்கத்தில் திங்கள் 20-ந் திகதி காலை 9-க்கும் மாலை 5-க்கும் இடையில் நேரில் வருபவர்களுக்கு பேட்டி நடாத்தப்படும். 1038

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமுகர்களும் நிகழ்ச்சிகளும்

### மட்டக்களப்புப் பண்டிதர்

வித்துவான், பண்டிதர் திரு. வி. சீ. கந்தையா எழுதிய ''மட்டக்களப்பு தமிழகம்'' எனும் நூலுக்கு ஸ்ரீ லங்கா சாஹித்திய மண்டலத்தார் ஆயிரம் ரூபா பரிசு வழங்கியிருக்கிறார்கள். 1964-65-ம் ஆண்டுக்கான சாஹித்திய பரிசு இந் நூலுக்குக் கிடைத்திருக்கிறது.

சுவாமி விபுலானந்தருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பண்டிதர் கந்தையா பி. ஓ. எல்., அடிகளாரிடம் சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலான காப்பியங்களையும் பழந்தமிழ் இலக்கியங்களையும் பயின்றிருந்தார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்ற தமிழ்ச்சங்கங்களின் பண்டிதரும இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவானும் அண்ணமலைப் பல்கலைக்கழக பட்டதாரியுமான பண்டிதர் கந்தையா கண்ணகி வழிபாடுகளின் பால் கொண்ட ஈடுபாடு காரணமாக ''கண்ணகி அம்மன் குளுத்திப் பாடல்களை'' வெளியிட்டார். இதன் பின்னர், ''பாரதியின் பாஞ்சாலி சபதம்'', ''கட்டுரை இயல்'' ''கம்பராமாயணம் அயோத்தி, மந்தரை சூழ்ச்சிப் படலம்'', ''கைகேயி சூழ்வினைப்படலம் உரைவளம்'' போன்ற தமிழ் நூல்களையும் வெளியிட்டார். விபுலானந்த அடிகளாரது தாபனமாகவுள்ள சிவானந்த வித்தியாலயத்தில் அதிக காலமாக ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், தற்பொழுது அரசாங்க பாட புத்தகக் குழுவில் உயர் வகுப்புகளுக்கான தமிழ் மொழிப் பிரிவில் பணியாற்றுகின்றார்.

மட்டக்களப்பு விபுலானந்த கழகப் பொதுச் செயலாளராகவும் கிழக்கிலங்கை பண்டிதர் கழகத் தலைவராகவும் மற்றும் பல்வேறு இலக்கிய, சமய, கலாச்சார சங்கங்களின் முக்கிய உறுப்பினராகவும் பணிபுரியும் பண்டிதர் கந்தையா, அண்மையில் மலேசியாவில் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் அகில உலகதமிழ் ஆராய்ச்சிக் மகாநாட்டுக்கு இரண்டு ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்க வுருக்கின்றார். அன்னாரின் அயராத சேவை, கிழக்கு மாகாணத்தில் மொழிக்கும் தமிழ்க் கலாச்சாரத்துக்கும் புத்துயிர் அளித்து வருகிறது.

### வித்தியாரத்தினம் திரு. சோ. நடராஜன்

சாஹித்திய மண்டல இலக்கிய பரிசு பெற்ற மற்றொருவரான வித்தியாரத்தினம் திரு. சோ. நடராஜன் இரண்டாவது தடவையாக இப்பரிசுபெறும் கௌரவத்தை எய்துகிறார். இவர் எழுதிய 'பொம்மைவண்டி' என்ற நாடக நூலுக்கு சாகித்திய மண்டலம் இவ்வாண்டு பரிசு வழங்கியிருக்கிறது. 'பொம்மை வண்டி' வடமொழியில் சூத்திர மகாகவி இயற்றிய நாடகத்தின் தமிழாக்கம்.

''நாடகம் எழுதினால் போதுமா? அதை அரங்கிலே நடித்துக் காட்டவேண்டும். அதுதான் நாடக வளர்ச்சிக்கு உயிர்போன்றது. அதைத் தமிழ் நாடக அபிமானிகள் நன்குஉணரவேண்டும். அரங்கேற்றும் துறையிலும் நடிக்கும்துறையிலும் பலவகையான முன்னேற்றங்கள் உண்டாகி விட்டன. நாடக ஆசிரியர் போலவே நாடகத்தைத்தயார் செய்து அரங்கேற்றுபவரும் சிறந்த சிருட்டிக் கவிஞர். அதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்று கூறும் வித்தியாரத்தினம் 'பொம்மை வண்டி' நாடகத்தை அரங்கில் நடிப்பதற்கேற்ற இலகுவான முறையில் அமைத்துத் தந்திருக்கின்றார்.

இவர் கவிதை உருவில் ஆக்கிய தாகூரின் ''கீதாஞ்சலி'' 1950-ல் வெளியாயிற்று. அதைத் தொடர்ந்து காளிதாசரின் ''மேகதூதும்'' வெளியாயிற்று. வடமொழியிலுள்ள ''இதோபதேசம்'' என்ற கதைத் தொகுதியின் பூரண மொழிபெயர்ப்பைத் தமிழிலே முதன்முதலாக 1961-ல் வெளியிட்டு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்றார்.

கவிதை, சிறுகதை, நாடகம், விமரிசனம் என்ற துறைகளிலெல்லாம் தமது எழுத்தினால் இன்று ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கி வரும் வித்தியாரத்தினம், பத்திரிகைத் தொழிலில் தமது ஆரம்ப வாழ்க்கையைத் தொடங்கியவர்.

நமது பண்டைய இலக்கிய மரபுகளையும் மொழிமரபுகளையும் நன்கு அறிந்து நவீன இலக்கியங்களையும் ஆராய்ச்சிகளையும் நடத்துவதே தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்பது இவர்கருத்து.

இலங்கைக் கலைச்சங்கத்திலே தமிழ் நாடகக் குழுவிலும் திரைப்படம், நூற் பிரசுரம் என்பவற்றின் குழுவிலும் அங்கம் வகிக்கிறார். இலங்கைக் கல்வி ஆலோசனைச் சபையிலும் பாடநூற் பிரசுரச் சபையிலும் அங்கத்தவர். மாணவர்க்காக முப்பதுக்கு மேற்பட்ட நூல்களைத் தமிழாக்கஞ் செய்துள்ளார்.

அரசாங்க மொழி பெயர்ப்புத் திணைக்களத்தில் இன்று தலைமைப்பதவி வகிக்கும் வித்தியாரத்தினம் இதற்கு முன் கல்வி இலாகாவில்பரீட்சைப்பகுதியின் அத்தியட்சகராக உயர்பதவி வகித்தார். வித்தியாரத்தினம் என்ற விருது இவரது இலக்கியப் புலமைக்காக தென்னிந்தியாவில் வழங்கப்பெற்றது. ஜி. எம்.

# 'தொண்டர் தம் தொண்டர்;' அல்வையூர் அளித்த வைரமுத்து

''அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால்—
இன்பநிலை தானே வந் தெய்தும் பராபரமே''

என்று மெய்மறந்து பாடினார் ஒரு மெய்யடியார். இப்படியாக அன்பர் பணி செய்வதற்கென வாழையடி வாழையாக வந்துதித்த தொண்டர் தம் தொண்டர் பரம்பரையில் அல்வையூர் க. வைரமுத்து அவர்களும் ஒருவர் என்பதை எல்லோரும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்வர். இம்மெய்யடியார் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக அன்பர் பணி செய்துவிட்டு தனது அறுபதாம்ஆண்டைக்கூட நிறைவேற்ருது 7-8-65 அன்று எம்மெல்லோரையும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு சச்சிதானந்தக்கடலில் வீழ்ந்து என்றும் அழிவிலா இன்ப நிலையை அடைந்துவிட்டார்.



## என் தொடர்பு

காலஞ்சென்ற வைரமுத்துவுடன் ஏறத்தாழ 30-35 ஆண்டுகளாக நெருங்கிப்பழகும் அரிய வாய்ப்பு எனக்கு இருந்து வந்தது. ஆகவே அன்னாரைப்பற்றியும், அவரது அரும் பெரும் சேவைகளைப்பற்றியும் ஓரளவு நன்கு அறிந்துள்ளேன். ஆகவேதான் வைரமுத்துவைப் பற்றியும் அவரதுவாழ்க்கையைப் பற்றியும்அதிகாரபூர்வமாகஎழுத முடிகின்றது.

## புரட்சிவாதி

நான் அறிந்த வைரமுத்து அல்வாயிலுள்ள பிரபல சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலும் வைதீகத்திற்கும் மூடப்பழக்கவழக்கங்களுக்கும் அவர் இடமளிக்கவில்லை. இறக்கும் வரை அல்வையூரில் உள்ள கோவிலொன்றின் முகாமையாளராக இருந்த அவரிடம் சில புரட்சிகரமான எண்ணங்கள் நீண்டகாலமாக இருந்து வந்தன. அவற்றுள் தீண்டாமையை எப்படியாவது ஒழித்துக் கட்டவேண்டுமென்ற அவரது நோக்கம் குறிப்பிடத்தக்கதொன்று. இதற்காக அன்னார் திரைமறைவில் நின்று எடுத்த முயற்சிகளும், செய்துவந்த பிரசாரமும் கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே தீண்டாமை ஒழிப்பு இயக்கம் அவரது மறைவால் ஒரு படி பின்சென்றுவிட்டது என்று சொன்னால் மிகையாகாது.

## தமிழ்த்தொண்டன்

அன்பின் இருப்பிடமான வைரமுத்து ஓர் உண்மைத் தமிழ்த் தொண்டனாகவும் விளங்கினார். தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழர் முன்னேற்றத்திற்காகவும் தமிழர்களால் எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியிலும் வைரமுத்து அவர்களுக்குப் பெரும் பங்கிருந்துவந்தது. கொழும்புத் தமிழ்ச்சங்கம், இசைக்கலைமன்றம் போன்ற தமிழ்க்கழகங்களின்நல்வாழ்வுக்கு வழிவகுத்தவர்களின் முன் வரிசையில் வைரமுத்து என்றும் வைத்துப் போற்றப்படுவார். அவர் மறைவு தமிழ் வளர்ச்சி இயக்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பென்பதில் ஐயமில்லை.

## சைவத்தொண்டு

சமூகத்தொண்டு, தமிழ்ப் பணி ஆகியவற்ருேடு வைரமுத்துவின் பொதுத் தொண்டு நின்றுவிடவில்லை. சைவப் பழமென எல்லோராலும் போற்றப்பட்ட அவர் சைவத்திற்காகச் செய்த திருப்பணிகள் கொஞ்சநஞ்சமல்ல. கொழும்பு விவேகானந்த சபை, கதிர்காம யாத்திரீகர் தொண்டர்சபை போன்ற மதவளர்ச்சிக்கழகங்கள் வைரமுத்து அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டிருக்கின்றன. அவரது பலன் கருதாப் பெரும்முயற்சியால் வாழ்வுபெற்ற மத வளர்ச்சிக்கழகங்கள் பல. இக்கழகங்களுக்கும், அவை போற்றிவரும் சைவத்திற்கும்வைரமுத்துவின் மறைவு ஒரு பேரிழப்பாகும்.

## அயரா உழைப்பு

வைரமுத்துவிடம் ஒரு பெருங்குணத்தை நாம் எல்லோரும் காணமுடிந்தது. அவர் முயற்சியில் இறங்கிவிட்டால் பின் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அதற்காகஅர்ப்பணித்து அது வெற்றியீட்டும்வரை அயராது உழைப்பார். தோல்வியைக்கண்டு சலிப்படையார். இதற்கு இரு மேற்கோள்களைத் தரமுடியும். மார்கழித் திங்களில் நடைபெறும் திருவெம்பாவைப் பூஜை எல்லா ஆலயங்களிலும் நடைபெற வேண்டும்; அப்பூஜைகளும் திருவெம்பாவைப் பாடல்களும் வானொலியில் அஞ்சல் செய்யப்படவேண்டும் என்பதற்காகக் காலஞ்சென்ற கே. கனகரத்தினம், எம். எஸ். திருவிளங்கம் போன்ருேர் தலைமையில் எம்மில் சிலர் பாடுபட்டு வந்தோம். அம் முயற்சியில் வைரமுத்து முழுமூச்சுடன் இறங்கினார். வெற்றியீட்டும்வரை அயராது உழைத்தார். இதுபோல் கதிர்காமத்திலுள்ள மடங்களை அகற்றுவதென்று முன்னைய அரசாங்கம் முடிவு செய்தபொழுது வைரமுத்து துடியாய்த்துடித்தார். இம் முடிவை ஆட்சேபித்துக் காலஞ்சென்ற பெரியார் ஸ்பென்சர் இராசரத்தினம் ஒருமகஜரைத் தயாரித்தார். அவரது முயற்சிக்கு வைரமுத்து பக்கபலமாய் நின்று ஒரு சில நாட்களில் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் கையொப்பங்களை அம்மகஜருக்காதரவாகச் சேகரித்தார். இம்மகஜரை அன்றைய முதலமைச்சர் ஸ்ரீமாவோ அம்மையாரிடம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எடுத்துச்சென்று சைவப் பெருமக்களின் ஆட்சேபத்தைத்தெரிவித்தபோது முதலமைச்சர் பிரமித்தவராய் ''இவ்வளவு தொகையினர் கைச்சாத்திட்ட மகஜரை நான் இதுவரை கண்டதேயில்லை'' என்று கூறினாராம். இவை வைரமுத்துவின் உழைக்கும் ஆற்றலை நன்கு சித்தரிக்கின்றன.

## காந்திதாசன்

வாழ்நாளில் வைரமுத்து ஒரு காந்திதாசனுகத் திகழ்ந்தார். காந்திஜி இலங்கைக்கு வந்தபோது இளைஞன் வைரமுத்துஅன்னாரைப் பார்க்க ஓடோடிச்சென்ருர். மகாத்மாவின் உபதேசங்களைக்கேட்டார். மெய்மறந்தார். அன்று முதல் வைரமுத்துவிடமிருந்து சில தீய குணங்கள் காற்ருேடுகாற்ருய் மறைந்தன. சுருட்டு, சிகரட் புகைத்தல், புலால் உண்ணல்உணவுச்சாலைகளில் உணவருந்தல், மேல்நாட்டு உடை அணிதல், றிக்ஷாவில் போதல் — இப்படியானபல பழக்கங்களைக் கைவிட்டார். அதுவே வைரமுத்துவின் வாழ்வில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது.

## விளம்பரத்தைவெறுத்தவர்

இத்தகைய மாந்தருள் மாணிக்கம், ஒன்றை மட்டும் வெறுத்தார். ஒரு சீவனுக்குத்தானும் கெடுதி நினைக்காதவர் சுய விளம்பரம் ஒன்றை மட்டும் விரும்பவில்லை. இதனால் அவரது முயற்சிகளும் சாதனைகளும் போதிய விளம்பரத்தைப் பெறவில்லை. ஆகவே சமூகத்தில் அவருக்குக்கிடைக்க வேண்டிய பட்டம், பதவி, கௌரவம் யாவும் கிடைக்காதுபோய்விட்டன. அதையிட்டு எம்போன்றவர்கள் கவலைப்பட்டோம். ஆனால் வைரமுத்துவோ மகிழ்ச்சி கொண்டார். எம்மீது இரக்கம்கொண்டார்.

## அழியாப்புகழ்

அன்பின் இருப்பிடமாக, தன்னடக்கத்தின் இருப்பிடமாக, கள்ளங்கபடமற்ற புன்முறுவலின் வாழ்விடமாக, சைவப்பழமாக, தமிழுடியானுக, தன்னலமற்ற தொண்டின் சின்னமாக, பெரியவர் சின்னவர், கற்றவர் கல்லாதார் எல்லோருக்கும் ஐயாவாக வைரமுத்துவை அறிந்திருந்த பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் அந்தக் கருணை வடிவத்தை இனிமேல் காணமுடியாது. எனினும் இன்றைய சமூகத்திற்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் வைரமுத்து செய்த நன்மைகள் அவருக்கு என்றுமே அழியாப்புகழைத் தேடித்தந்துள்ளன.

— சு. சங்கரசிவம் —

வெங்காயம், தக்காளி, மிளகாய், கத்தரி, கோவா முதலிய பயிர்களுள் உண்டாகும் களைப்புல்லை அழிப்பதற்கு
புதிய மருந்து
டெக்தால்
DACTHAL
Agents:
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna, Phone: 389
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாசி மீ 3 உ (19-9-65)

# சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு

ஒரு பிரமுகர், பணவசதியும் படைத்தவர். அரசியலிலும் சமூக சேவையிலும் ஈடுபாடுடையவர். தென்னிந்தியாவிலிருந்து அறிஞரும் பிரபல அரசியல்வாதியுமான ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சமயம் அந்தப் பிரமுகர் இவரை தமது வீட்டுக்கு தேநீர் விருந்துக்காக அழைத்திருந்தார். வேறு சிலரும் அவ்விருந்துக்கு வந்திருந்தனர். தேநீர் விருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கையில் பலரும் அரசியல், சமயம், சமூகமுன்னேற்றம் பற்றி தங்கள் தங்கள் கருத்தை வெளியிட்டு சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். தென்னிந்தியத் தலைவரும் நமது பிரமுகரும் பல விஷயங்களைப்பற்றியும் அளவளாவினர். தேநீர் விருந்துக்குப் பின்னர் அங்கு பொதுக் கூட்டமொன்றும் நடைபெறவிருந்தது. விருந்து முடிவுறும் தறுவாயில் தென்னிந்தியத் தலைவரை அந்தப் பிரமுகர் தனியாக அழைத்து, "கூட்டத்தில் நீங்கள் எந்த விஷயத்தைபற்றி வேண்டுமானாலும் பேசுங்கள். ஆனால் சாதிவித்தியாசம் பற்றியும் அதை ஒழிக்கவேண்டியது பற்றியும் பேசாதீர்கள். ஏனென்றால் இந்தப் பகுதியில் அது கொஞ்சம் ஊறிப்போன விஷயம்" என்றார். தென்னிந்தியத் தலைவருக்கு அது பிடிக்கவில்லை; அவருக்கு சிறிது கோபம்கூட வந்தது. வீட்டின் சுவர்களை சுற்றிக்கண்ணோட்டம்விட்ட அவர், உடனே அந்தப் பிரமுகரைப்பார்த்து, தயவு செய்து உங்கள் சுவர்களில் தொங்கிக்கொண்டிருக்கும் காந்தி, நேரு படங்களை கழற்றி வைத்துவிடுங்கள்" என்று கூறினர். பிரமுகருக்கு வாய் திறந்து பதில் சொல்லமுடியவில்லை. அந்தத்தலைவர் அங்கு கூட்டத்திலும் பேசவில்லை. பின்னர் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த ஒரு கூட்டத்தில் அவரே இந்தத் தகவலையும் வெளியிட்டார். இது நடைபெற்று சில வருடங்களாகின்றன. அப்பொழுதிருந்த அளவுக்கு இன்று யாழ்ப்பாணப் பகுதியில் சாதிப்பாகுபாட்டுத் திமிர் இல்லையென்றாலும் சமுக ஏற்றத்தாழ்வு இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

சமயத்தின் பெயரால் சாதிவித்தியாசம் பாராட்டப்படுவதை சமயத்தலைவர்கள் மட்டுமல்ல சமயத்தின் உண்மைகளை உணர்ந்தவர்களும் அதுமுறையல்லவெனத் தெரிவித்துக் கண்டனக் குரல் எழுப்பினர். இன்று ஓரளவுக்கு அதைப் பொதுமக்கள் உணர்ந்து வருகின்றனர். சாதிவித்தியாசம் பாராட்டப்படுவதற்கு சமயத்தைக் குறைகூறுவாருமுளர். எந்த மதத்திலும் குறை குற்றமில்லை. அதை அனுஷ்டிப்போர் மீது குறையும் குற்றமும் உண்டு எந்த மதமும் தீயதைச் செய்யும்படியோ மக்களுக்குள் மக்கள் பேதம் காட்டவேண்டுமென்றோ கூறவில்லை. சாதிப்பாகுபாடு இந்து சமயத்தவர்களுக்குள் மட்டும்தான் இருப்பதாகக் கருதுவதும் தவறு. பல்வேறு சமயத்தவர்களுக்குள்ளும்கூட இது இருக்கிறது. பல்வேறு நாட்டிலும் கூட இந்தப் பாகுபாடு ஒவ்வொரு உருவத்தில் இருந்துவருகிறது. அமெரிக்காவில் நிறவெறிப்பிரச்னை, எத்தனையோ சட்டங்கள் இயற்றியும் கூட இன்னும் ஒழிந்தபாடாக இல்லை. இங்கும நமது நாட்டிலும்கூட சாதிப்பாகுபாட்டை ஒழிப்பதற்குச் சட்டம கொண்டுவந்து சிலவருடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவில் சட்டங்கள் கொண்டுவந்து சாதிப்பாகுபாடு பெருமளவில் நீக்கப்பட்டுள்ளதென்பது உண்மையே. ஆயினும் அங்குநாட்டின் விடுதலைப்போராட்ட காலத்திலேயே காந்தியடிகள் வகுத்த நிர்மாணத்திட்டத்தில் சாதிப்பாகுபாடு ஒழிப்புத்திட்டமும் ஒன்றாக இடம் பெற்றதால் மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட வழிபிறந்தது.

சாதிப்பாகுபாட்டை ஒழிப்பதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கூட தங்களால்தான் முடியுமெனப் பிரசாரம் செய்தன; இன்னும் செய்துவருகின்றன. சில மதத்தினர்கூட இப்பிரச்னையை வைத்து மதமாற்றம் செய்துவந்தனர். ஆனால் சாதிப்பாகுபாடோ, சமூக ஏற்றத்தாழ்வோ இன்னும் ஒழியவில்லை. சட்டத்தினாலும் சமயமாற்றத்தினாலும் அரசியல் கட்சிகளினாலும இச்சமூகநோயை, குறிப்பாக, இலங்கையில் தமிழ், சைவ சமூகத்தை பல்லாண்டு காலமாகப் பீடித்துள்ள இக்கொடிய நோயைக் குணப்படுத்திவிட முடியாதென்பது தெளிவாகிவிட்டது.

பரம்பரை பரம்பரையாக இரத்தத்துடன் ஊறிப்போன இக்கொடிய சமூகவியாதியை மக்களின் மனமாற்றத்தினால் ஒழிக்க முடியும். இதை உணர்ந்துதான் யாழ்ப்பாணத்தில் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புவாரம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நல்ல முயற்சி வெற்றிபெறவேண்டும். பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்கவேண்டும். சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு நீங்கினால் தான் உண்மையான ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்படும்.

# சூரன் அமைச்சியல்

## கந்தபுராணக் கட்டுரைகள்—10

## ஆலோசனை

### வ. குகசர்மா

பண்டைய தமிழ் காப்பியங்களிலே அரசர் தம் மந்திரிகள், படைத்தலைவர், சுற்றத்தவர், நண்பர் முதலியோர் கூடியுள்ள சபைகளிலே ஆலோசனை நடத்தி வந்திருப்பதை நாம் காணக் கூடியதாயிருக்கின்றது. இராமருக்கு முடிசூட்ட நினைத்த தசரதர் ஓர் ஆலோசனைச் சபையைக் கூட்டினார். இராவணன் இராமருடன் யுத்தம் செய்ய முன்பு ஓர் ஆலோசனைச் சபையைக் கூட்டினான். அவ்வாறே வீரவாகுதேவர் தூதாக வந்து திரும்பிச் சென்ற பின்பு சூரபன்மன் ஓர் ஆலோசனைச் சபையைக் கூட்டினான். தமது ஒற்றர்கள் மூலம் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானுடன் வந்துள்ள சேனைகளின் தொகையையும் அவர்கள்வீரத்தையும் அறிந்திருந்தான். சூரபன்மனது ஆலோசனைச்சபையில் அவனது தம்பியாகிய சிங்கமுகாசூரன், சூரனது பிள்ளைகள், மந்திரிமார்கள், சேனைத்தலைவர்கள் ஆகியோர் இடம் பெற்றனர். சூரன், தான் மந்திராலோசனைச்சபை கூட்டியதன் காரணத்தைக் கூற ஆரம்பித்தான். தனது மற்றோர் தம்பியாகிய தாரகாசூரன் யுத்தத்தில் கொல்லப்பட்டதையும், தனது இளைய மைந்தன் வீரவாகுதேவரால் கொல்லப்பட்டதையும் தனது நகரம் அழிந்துபோனதையும் எடுத்துச் சொன்னான். இவ்வளவும் நடந்த பின்பும் சூரனுக்கு தனது வீரத்திலோ, அல்லது தான் யுத்தத்தில் அடையும் வெற்றியைப் பற்றியோ சந்தேகம் ஏற்படவில்லை. தான் ஆலோசனைச் சபையைக் கூட்டியதற்கு ஒரு காரணத்தைக் கூறுகிறான். உபாயத்தில், சூழ்ந்த செல்வத்தில், வலிமையில் தாம் எவ்வளவு மேன்மை யுடையவராயிருந்தாலும், பகைகொண்டு யுத்தம் செய்ய முன்பு தனக்குத் துணையா யுள்ளவர்களோடு ஆலோசனை செய்து அவர்கள் கருத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். அதுதான் பண்டைய வழக்கம் என்று கூறினான்:

''துய்த்திடு திருவினில்
வலியில் சூழ்ச்சியில்
எத்துணைப் பெரியர்தா
மெனினும் மேலையோர்
கைத்தொரு வினைசெயக்
கருதிற் றம்முடை
மெய்துணை யோரைமுன்
வினவிச் செய்வரால்''

#### சுருதி பேதம்

சூரன் இவ்வாறு கூறி முடித்ததும் பலர் சூரபன் மனது நோக்கத்தையே வலியுறுத்திப் பேசினார்கள். அசுரர்களின் வீரத்திற்கு எதிரே நிற்கவல்லவர்கள் யார் என்று வினவினார்கள். சிலர் சூரன் மீது குற்றம் சாட்டினார்கள். தாரகாசூரன் கொல்லப்பட்டான் என்பதை அறிந்தவுடனே யுத்தத்திற்குச் செல்லவில்லை என்பதே அந்தக் குற்றம். அவ்வாறு வலிந்து சென்று யுத்தம் செய்தால் தூதுவனால் இந்த நகரம் அழிந்திருக்குமா என்று கேட்டார்கள். பிழை செய்யப்பட்டுவிட்டது. அதனாலே பல துன்பங்கள் நேர்ந்ததும்உண்மைதான். அதற்காக அறிஞர்கள் கவலைப்பட்டு வாளாவிருக்கமாட்டார்கள்.

''கழிந்திடு பிழையினைக்
கருதிச் சாலவுள்
அழிந்திட லியற்கையன்
றறிஞர்க் காதலால்''

என்ற நீதியை வலியுறுத்தினர்கள் உடனே யுத்தத்துக்குப் பகைவனை ... பெருமான் இருக்கும் இடத்துக்குச் செல்லவேண்டும் எனக் கூறினார்கள். சூரனின் மூத்த குமாரனாகிய பானுகோபன் தானே படைகளுடன் யுத்தத்திற்குச்சென்று வெற்றிவாகை சூடுவேன் என்றான். ஏனையபுத்திரர்கள் தாங்களே யுத்தத்திற்குச் செல்லவேண்டுமென விரும்பினார்கள். படைத்தலைவர்களோ தாங்கள் நால்வகைச் சேனைகளுடனும் சென்று யுத்தம் செய்தாலே வெற்றி நிச்சயம் என்றார்கள். சூரனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. தனது மனதில் உள்ள எண்ணமே தமது மந்திரிகள், படைத்தலைவர்கள் முதலியோர் பேச்சில் வெளிவருவது கண்டு இறும்பூதெய்தினான். யுத்தம், வெற்றி இவையே அவனது காதுகளில் ஒலிக்கின்றன. இனிமையான சங்கீதக்கச்சேரி நடந்துகொண்டிருக்கின்றது. எங்கும் இசை வெள்ளம் பரந்து அதில் நாங்கள் மிகுந்த செல்வத்தைப் பெற்றுள்ளோம். செல்வம் அகக்கண்ணை மறைத்து விடும். படித்த, அறிவுள்ளவர்களால் கூறப்படும் நல்லுரைகளை வெறுத்தொதுக்கச் செய்யும் அவ்வாறு அறிவை ஒதுக்கி செல்வத்தின் பெருமையால் செய்யுங் காரியங்கள் அழிவைக் கொடுக்கும். உண்மையான அன்புடையவர்கள் வரும் கேட்டைச்சொல்லித்தடுத்து விடவேண்டும். ''வரும் பொருள் உரைத்தல் மந்திரிக்கழகு.'' வீண் வாய் வார்த்தைகள் தேவையற்றவை.


''பெற்றிடு திருவினிற்
சிறந்த வெஞ்சினங்
கற்றவர் உணர்வையுங்
கடக்கும் அன்னது
முற்றுறு கின்றதன் முன்
னம் அன்பினோர்
உற்றன கூறியே உணர்த்
தல் வேண்டுமாம்.''

#### மேலையோரும் பகைவரும்

ஆலோசனைச் சபையிலே இருவிதமானவர்களைக்காண்கிறோம். ஒன்று தங்கள் தலைவனாகிய அரசனது எண்ணம் யாதென்பதை அறிந்து கொண்டு, அவர்கள் விருப்பமே தமது விருப்பமாகச் சொல்லுகின்றவர்கள். அவர்களால் ஒரு பிரயோசனமுமில்லை. அவர்கள் பிரதானமாகத் தன்னலம் விரும்பிகள் என்றுதான் சொல்லலாம். இராவணன் சீதையைக் கவர்ந்துகொண்டு வந்தது சரியென வாதாட இராவணன் சபையில் பலர் இருந்தார்கள். தேவர்களை சூரபன்மன் சிறை வைத்தது சரி. இறைவனாகிய முருகப்பெருமானோடு கூட யுத்தம் செய்வதே சரி என்று கூறப் பலர்சூரனதுசபையில் இருந்தார்கள். இவர்கள் சூரன் விரும்பியதையே சொல்லி அவனை அழிவுப்பாதையில் செலுத்துவதனால் உண்மையான பகைவர் அவர்களே என்பதுசிங்கன் கருத்து. மற்றோர் சாரார் அரசன்கோபங்கொண்டு கொலைசெய்தாற் கூட உண்மையையே எடுத்துக் கூறுபவர்கள். ''தம்முயிர்க் குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்'' எனஇத்தகையோரை கம்பர் புகழுகிறார். இவர்கள் வார்த்தைகள் சிலவேளைகளில் அரசர்களது செவிகளில் அக்கினியைச்செருகிய தன்மைபோன்றிருக்கும். அவ்வாறு நீதியைச் சொல்வோர்மேலவர். மற்றையோர் பகைவர்கள் என்பது சிங்கனின் கருத்து.

''மன்னவர் செவியழல்
மடுத்த தாமென
நன்னெறி தருவதோர்
நடுவு நீதியைச்
சொன்னவர் அமைச்சர்
கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவாறு
ரைக்கின்றார்களே''

(வளரும்)



வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் அண்மையில் நிறைவேறிய தேவி உற்சவத்தின் பொழுது திரு. நல்லதம்பி அவர்களின் உபயமாகச் சந்தனங்கி அலங்கிர்தத்துடன் ஸ்ரீ வாலாம்பிகாதேவி காட்சியளித்ததைப் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கிழக்கில் ஒரு யுத்தம்

இந்தோ - பாகிஸ்தான் யுத்தநிறுத்தத்திற்கு, பாகிஸ்தான் மூன்று நிபந்தனைகளை விதித்திருக்கிறது. அவை வருமாறு:


(1) காஷ்மீரிலிருந்து இந்தியத் துருப்புக்களும், பாகிஸ்தான் துருப்புக்களும் வாபஸ் பெறவேண்டும்.

(2) ஐ. நா. வின் சார்பில் ஆசிய - ஆபிரிக்க அமைதிப் படை ஒன்றை அங்கு ஏற்படுத்தவேண்டும்.

(3) மூன்று மாதங்களில் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

ஆனல் இந்தியாவைப் பொறுத்தவரை யுத்த நிறுத்தத்திற்கு அது முன் நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை. எனினும் மேற்கண்ட பாகிஸ்தானின் மூன்று அம்ச நிபந்தனைகளில் ஒன்றைக்கூட ஏற்கத் தான்தயாராய் இல்லை என திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. காஷ்மீர் இந்தியாவின்பிரிக்கமுடியாத ஒரு பகுதி. இதை எந்த சக்தியாலும் மாற்றமுடியாது என்றும் இந்தியா கூறுகிறது.





மொத்தத்தில், தனது மூன்றம்சத்திட்டத்தை ஏற்காவிட்டால் யுத்த நிறுத்தம் இல்லை என பாகிஸ்தானும், எந்த அரசியல் நிபந்தனையின் பேரிலும் யுத்தத்தை நிறுத்தமுடியாது என இந்தியாவும் கச்சைகட்டி நிற்பதால், யுத்ததேவன் இன்னும் கொக்கரித்துச்சிரித்து வருகிருன். இதற்கிடையில்எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்குமாப்போல் ஒருசில நாடுகள் பாய்ச்சல் காட்டி வருகின்றன.

''காஷ்மீரில் ஊடுருவல் செய்த அத்தனை பேரையும் பாகிஸ்தான் விலக்கிக் கொள்ளவேண்டும். மேலும் ஊடுருவல் இல்லாமலிருக்க சரியான உத்தரவாதமும் வேண்டும்'' என்று இந்தியா கூறுகிறது.

## உலகமேடை

டி.எம்.எம்

எந்த நிபந்தனையின் பேரில் யுத்தம் நிறுத்தப்பட்டாலும்கூட, காஷ்மீரில் பழைய யுத்த நிறுத்த எல்லைக் கோட்டை இந்தியா ஏற்காது எனத் தெரிகிறது. ஊடுருவாளர்கள் உட்புக முடியாதவாறு அஸாத் காஷ்மீரில் தான் பிடித்த பகுதியையும் ஜம்மு காஷ்மீருடன் சேர்க்கவேண்டும் என அது வற்புறுத்தும் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன.

ஆகக்கூடி, 10 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தத்தை நிறுத்த இருநாடுகளும் தயாராய் இல்லை. இந்த யுத்தத்திஞல் இதுவரை எவருக்கும் எவ்விதப்பலனும் இல்லை. பதிலாக அழிவும், சொல்லொணுக்கஷ்டங்களுமே ஏற்பட்டிருக்கின்றன.

உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகியன ஏராளம்.

ஸியால்கோட் போர்முனையில் இந்தியத்தளபதிகளின் யுத்ததந்திரம் ஜெனரல் ரோமலின் சாகஸத்துடன் ஒப்பிடப்பட்டது. காலஞ்சென்ற ஜெனரல் ரோமல் ஹிட்லரின் முக்கிய தளபதிகளில் ஒருவர். ஆபிரிக்காவில் ஜெனரல் மாண்ட்கோமரியின் தலைமையில் போரிட்ட 8-ம் சேனையை தனது அஸகாய சூரத்தனத்தால் திணறடித்ததீரர் அவர். மகாபாரதத்தில் வரும் இதிகாசநாயகர்களுக்கு ஒப்பானவர். ரோமலின் அற்புத சாகஸத்தைப் பற்றியும், யுத்த தந்திரத்தைப்பற்றியும் பல நேசதேசத்தளபதிகளே வியந்திருக்கிருர்கள். ரோமலின் சாகஸத்துடன் ஸியால்கோட் யுத்தத்தை ஒப்பிடுவது எவ்வளவு தூரம் சரி என்பது தெரியவில்லையாயினும், வெளிதேச யுத்த நிபுணர்கள் புகழக்கூடிய அளவுக்கு இந்தியாவின் படை வியூகம் வகுக்கப்பட்டு, அதற்கேற்ற முறையில் நகர்த்தப்பட்டிருக்கிறது. அதே சமயம், இந்தியவீரர்களைப்போலவே பாகிஸ்தான் வீரர்களும் தீரத்துடன் போரிட்டிருப்பதை மறுக்கமுடியாது. இருதேச வீரர்களும் பிரிக்கப்படாத பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரே ராணுவத்தில் இருந்ததே இதற்குக் காரணம். தற்போதைய பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட்மார்ஷல் அயூப்கான், முன்னுள் இந்திய சேனதிபதி ஜெனரல் கரியப்பாவின் கீழ் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதுவாயினும், பிரிவினைக்குப்பின் இந்திய ராணுவத்தில் உலகம் புகழும் கூர்க்காக்கள், டோக்ராக்கள், சீக்கியர்கள் ஆகியோர் நிறைந்திருக்கிருர்கள். இந்திய ராணுவம் வரலாற்றுப் புகழ்பெற்றது. ஆபிரிக்கப் போரில் ஜெர்மன் ஜெனரல் வான் ஆர்னிமை உயிருடன் சிறைப்பிடித்தது உட்பட, பல வீரசாகஸங்கள் நடத்தி ''விக்டோரியா கிராஸ்'' விருதுகளைப் பல இந்திய வீரர்கள் பெற்றனர். வின்ஸ்டன் சர்ச்சில் கூட அவர்களது போர்த்திறமையை வெகுவாகப் பாராட்டியிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனர்களின் எதிர்பாராத திடீர்த்தாக்குதலால் பலர் உயிரிழந்த போதிலும், கொஞ்ச எண்ணிக்கையைக் கொண்டிருந்த அவர்கள் வீரத்துடன் போராடியே உயிர் விட்டனர். 1947-ம் ஆண்டு காஷ்மீர் யுத்தத்திலும், ஹைதராபாத், ஜூனகாத், கோவா ஆகிய இடங்களில் திட்டமிட்டபடி அவர்கள் செயலாற்றியதும், கட்ச் முனையில் அவர்கள் காட்டிய தீரமும் பலரின் புகழுக்குரித்தாயிற்று என்பதை மறுக்க முடியாது.

இந்தப் பேனு எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது.



ஒரு சிறிய பின்னணியைக் காட்டுவதற்குத்தான் அது அப்படிச் சென்றது. ஆகவே மன்னிக்கவும்.

இரண்டாவது மகாயுத்தத்திற்குப்பின் மிகப்பெரிய டாங்கிப்போர் ஸியால்கோட்டில்தான் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சண்டையில் இருதரப்பாருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. பல பேட்டன் டாங்கிகளும், ஷெர்மான் டாங்கிகளும் அவற்றிலுள்ள மனித உருவங்களுடன் தீப்பிடித்து எரிந்தன. மிகப்பெரியபேட்டன் டாங்கிகளை பாகிஸ்தானியர் உபயோகித்தனர். ஒரு டாங்கியின் நிறை 40 டன்கள். அதில் பொருத்தப்பட்ட பீரங்கி 90 மிலிமீட்டர் அளவைக்கொண்டது. ஒவ்வொன்றும் பல லட்சரூபாய்கள் பெறுமதியுடையது. சக்திவாய்ந்த பேட்டன் டாங்கிகள் தீயைக்கக்கி வந்து அதே தீக்கு இரையாகின.

ஸெப்ரி ஜெட்விமானங்களும், மிக் விமானங்களும், ஹண்டர் விமானங்களும், கான்பரா விமானங்களும் தாராளமாக இச்சண்டையில் பங்கெடுத்துக்கொண்டு ரணகளத்தை விஸ்தரித்தன. 20 ஆண்டுகளுக்குப் பின் உலகம் முதல்தடவையாக இந்தப்பயங்கரப் போரைக்கண்டது.

இந்த விஷயத்தை எழுதி முடித்தபோது ஐ நா. பொதுக்காரியதரிசி யுதாண்டின் [illegible] தோல்வியுற்றதாகச் செய்திவந்தது. அதைத் தொடர்ந்து, இந்தியாவுக்கு சீனவின் எச்சரிக்கைபற்றிய செய்தியும் கிடைத்தது. ஒருவேளை நீங்கள் இதைப் படிக்கும் போது, வேறு பல எல்லைகளிலும் தொல்லைகளால் சூழப்பட்ட நாடாக இந்தியா விளங்கக்கூடும்.

இந்தோ-பாகிஸ்தான் உபகண்ட சமாதான முயற்சி யுதாண்டின் கையிலிருக்கிறதா, காமன்வெல்த் நாடுகளின் கையிலிருக்கிறதா, அல்லது அமெரிக்காபோன்ற வல்லரசுகளின் கையிலிருக்கிறதா என்பது இனித்தான் தெரியும்.

தற்போது இந்தியப்படைகள் பாகிஸ்தானில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆனல் பிரதேசங்களைப்பிடிப்பது அவர்கள் நோக்கமல்ல என்றும் பாகிஸ்தானின் ராணுவ பலத்தைச்சிதைப்பதொன்றே இந்தியாவின் நோக்கம் என்றும் திட்டவட்டமாக அறிவித்துவருகிருர்கள். இந்த நோக்கம் இப்போது ஓரளவு பூர்த்தியாக்கப்பட்டிருப்பதாயும் கூறுகிருர்கள்.

ஊடுருவாளர்கள் கை பலவீனப் பட்டபோது, பாகிஸ்தான் பகிரங்க உதவிக்குவந்தது. இப்போது பாகிஸ்தானின் கை பலவீனப்பட்டு வரும்போது, சீன பகிரங்க உதவிக்கு வரப்போகிறதா என்ற கேள்வி எங்கும் கேட்கப்படுகிறது.

## சூழ்வினைச் சிலம்பு

—ஜீவா-நாவுக்கரசன்—

கண்ணகி அன்று கணவன் வருகையை
கனவில் கண்டு கதையாய் தோழிக்கு
கன்னித் தமிழில் கனிந்த காதலால்
சொல்லி மகிழ, சோர்வுடன் கோவலன்
இல்லிடை வந்து உள்ளிடை செல்ல
நெஞ்சற்ற வனய் துஞ்சுற்ற தனை
மஞ்சை கண்ணகி மகிழ்வுடன் கண்டு
காலடி வீழ்ந்து கணவனைத் தொழுது
எத்தனை ஆண்டுகள் எனைத்துறந் திருந்தும்
சித்தம் உருகிச் சிறியேன் குடிசை
மெத்தவோ வந்தனை மிசமிக நன்றி
உள்ளே வருக உணவுட் கொள்ள
உடலில் வாட்டம் உண்டென் கொல்லோ
என்றுப சரித்து வரவேற்றனளே!

ஃ ஃ ஃ

சீரும் சிறப்பும் சீர்புகழ் செல்வமும்
பேரும் பெற்ற பெரும்புகழ் தொல்குடி
என்னல் அழிந்தது இன்னல் நிறைந்தது
சொன்னல் விளங்குமா சுகமினித் திரும்புமா?
மாயக் கிழத்தி மாதவி தனக்கு
ஆயக் கடனை அடைப்பது எப்படி?
சாய்ந்த புகழை, சரிந்த வாழ்வினை
எம்குலம் இழந்த மானம் மகிமை
எப்படித் திரும்பும் செப்படி பத்தினி?
கணவன் வந்ததும் கண்ணகி அடைந்த
களிப்பை எப்படி எழுத்தில் சொல்வது
பிறந்த இடத்தையும் புகுந்த இடத்தையும்
சிறந்த மனதுடன் திறம்பட வைப்பது
அறம் தெரிந்தாளும் அணங்கின் கடமை.
பெண்ணின் பெருந்தக்க யாவுள என்பது
இல்லாள் அகத்திருக்க இல்லாமை இல்லென
நல்லாள் கண்ணகி நன்குணர்ந் திருந்தாள்
என்காற் சிலம்பு இதமுடன் கொண்டு
நன்நகர் சென்று நயமுடன் விற்றுப்
பொருள்பல தேடுவோம் புறப்படும் என்றுள்
அம்மொழி அவனின் அன்பினைத் தூண்டிட
கோவலன் கரத்தால் கோமகள் கூட்டி
பாவலன் போல் பல பாபுனைந் தேற்றி

'முத்தே! பவளமே! முழுமதி முகமே!
வித்தே! அன்பின் வீரச் செல்வமே!
இத்தனை நாட்களும் எப்படி யிருந்தேன்?
பத்தரை மாற்றுப் பசும்பொன் உன்னை
இத்தரை மீதினில் எப்படி மறந்தேன்?
மருந்தோ மாயமோ மாதவி செய்தாள்.
மூடிய விழிகளை வாடிய என்னைத்
தேடிய பழிகளை தெய்வமாய் வந்து,
ஓடிடச் செய்தாய் உத்தமி பத்தினி
மதுரை சென்று மணிபல பெற்று
மாதவி கடனையும் மாண்ட புகழையும்
மீண்டு வருவோம் ஆண்டருள் செல்வியே!'
—என்றனன்.

போகும் வழியில் பொற்கொடி ஒருத்தி
அறத்தான் வருவதே இன்பம் என்பதை
திறத்தால் அறிந்து அறத்தால் வாழும்
துறவி கவுந்தி தூயநல் லாளை
நட்பாய் கொண்டு அப்பால் சென்றுள்
அருகன் கோவில் அடைந்திட வேண்டி
முருகன் கருணையால் முற்றுந் துறந்த
கவுந்தி அடிகள் கண்ணகி தம்முடன்
மதுரை நோக்கி மகிழ்வுடன் நடந்தார்.

(தொடரும்)

## ஸ்கந்தாவுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை பல்கலைக்கழக புகுமுகத்தேர்வில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களே கூடுதலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். வைத்திய பகுதிக்கு ஐவரும், பல் வைத்தியப்பகுதிக்கு இருவரும், மிருக வைத்தியப்பகுதிக்கு ஒருவரும், பௌதீக விஞ்ஞானப் பிரிவுக்கு ஏழு பேரும், பொறியியல் பகுதிக்கு ஏழு பேரும், கலைப் பிரிவுக்கு இருபதுபேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரியின் விசேஷ கூட்டத்தின்போது கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் பல்கலைக்கழகத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்பத்திரண்டு மாணவர்களையும் சிறந்த முறையில் கல்விகற்குமாறு வேண்டிக்கொண்டார்.

கல்லூரியின் வரலாற்றிலே பொறியியல் பகுதிக்கு அதிகமானவர்கள் தெரிவுசெய்யப்பட்டது இந்த ஆண்டில் தானென வும் அதிபர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா



# அதிசயத் திருடன்

— பெரி. சண்முகநாதன் —

மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தேன் உறக்கம் பிடிப்பதாக இல்லை. அப்படியே வெளியில் எழுந்துபோய்க் கொஞ்சம் காற்ருேட்டமாக உலாவி விட்டு வரலாமா என்று நினைத்தேன். ஆனுல் அந்த அமாவாசை இருட்டில் வெளியே காலெடுத்து வைக்க எனக்குத் துணிவில்லை. கடைசியில் ஏதாவது புத்தகத்தைப் புரட்டலாமென்று எண்ணி விளக்கைப் போட எழுந்தேன். மூன்ரும் அறையிலிருந்து திடீரென்று லீலா அக்காவின் குரல் கேட்டது.

''இஞ்சேருங்கோ, கொஞ்சம் சீக்கிரம் எழும்புங்களேன். எவ்வளவு நேரமாக எழுப்புவது ''

லீலா அக்காவின் குரலில் பரபரப்பும் நடுக்கமும் காணப்பட்டது. பாவம், அவள் எப்போதும் இப்படித்தான் மிகவும் பயந்த சுபாவமுடையவள். அதோடு அவளுக்கு இரக்க சிந்தையுமிருக்கிறதே, - அதுதான் பாராட்ட வேண்டிய விஷயம். பெண்களுக்கு இரக்கம் இயற்கைக் குணமென்ருலும் லீலா அக்காவிடம் அது ஒருபடி அதிகமென்றே சொல்லவேண்டும். இல்லாவிட்டால் முன் பின் தெரியாத எனக்குத் தன்வீட்டில் தங்குவதற்கு இடம்கொடுத்திருப்பாளா? ஏதாவது பலகாரம் பட்சணம் என்று செய்துவிட்டால் போதும். குழந்தை ராஜினியிடம் கொடுத்தனுப்பி விடுவாள். அந்த மூன்று வயதுக் குழந்தையும் ''மாமா! மாமா!'' என்று என்னை விடுவதேயில்லை. எப்படியோ ராஜினி எனக்குநல்ல பொழுதுபோக்காக அமைந்து விட்டாள். இரவிலே கூட என்னுடனே தூங்கிவிடுவாள். இப்போது கூடத் தன் பிஞ்சு விரல்களை வாயில் வைத்த வண்ணம் கண்ணயர்ந்து தூங்குகின்ருள். கள்ளங்கபடமறியாத ஜீவன்--கவலையின்றித் துயில்கின்ருள். ஆனுல் எனக்கோ! அடடா, மூன்ரும் அறையில் அப்புறம் என்ன நடந்தது என்பதைச் சொல்ல மறந்துவிட்டேனே-

''கொஞ்சநேரம் நிம்மதியாகத் தூங்கவிடேன். இப்போது என்ன உவரா கொள்ளைபோகிறது?'' --ரகுநாதன்-லீலா அக்காவின் கணவன் --சலித்துக் கொண்டார்.

''அப்படி இருந்தாலும் பரவாயில்லையே. இப்போது நம்வீடே கொள்ளை போகிறது. அடேயப்பா அப்படி என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கிறது! கைகால்களை நெளிக்காமல் சட்டென்று எழுந்திருங்களேன்'' -- லீலா அக்கா சிணுங்கிஞள்.

''என்னலீலா உளறுகிருய்? ஏதாவதுகனவுகண்டாயா?'' --தூக்கக்கலக்கத்தில் அரைகுறையாக வார்த்தைகளை உதிர்த்தார் ரகுநாதன்.

''நான் என்ன உங்களைப் போல கும்பகர்ணனுகவா தூங்குகின்றேன் கனவுகாண்பதற்கு? இதோ கொஞ்சம் உற்றுக் கவனியுங்கள். சமயலறையிலிருந்து ஏதோ சத்தம் கேட்கிறதல்லவா?''--- லீலா அக்கா படபடவென்று கூறிஞள்.

''அட பைத்தியமே, எலி எதையாவது உருட்டும். இதையா இத்தனை அமர்க்களப் படுத்துகிருய்?''-அலட்சியமாகக் கேட்டார் ரகுநாதன்.

''ஆமாம். இத்தனை நாட்கள் இல்லாத எலி இன்றைக்குத்தான் நம் வீட்டிற்கு விருந்து சாப்பிட வந்திருக்கின்றது. நானும் கால்மணி நரமாகத்தான் கவனித்துக் காண்டிருக்கின்றேன். செ

விட்டுவிட்டுப் பாத்திரங்களை எடுக்கும் ஓசையும், கீழே வைக்கும் ஓசையும் கேட்டுக் கொண்டேயிருக்கின்றன. அன்றைக்கும் இப்படி அலட்சியமாக இருந்துதானே தங்கநெக்லஸையும் பட்டுப் புடவைகளையும் பறிகொடுத்ததாக இந்திரா சொன்ஞள். போனவாரம் கூடப் பொன்னையாத் தாத்தா வீட்டில் இப்படித்தான் ஏதோ சப்தம் கேட்டதாம். தாத்தா துணிந்துபோய்க் கதவைத் திறந்தபோது முகமூடி போட்ட ஒருவன் கத்தியைக் காட்டி மிரட்டிவிட்டு ஓடிவிட்டானும். அம்மம்மா! இப்போது நினைத்தாலும் நடுங்குகிறது. இதோ பாருங்கள், இப்போது அந்த ஓசை அடங்கிவிட்டது. நாம் பேசுவது அவன் காதில் விழுந்து விட்டதுபோலிருக்கின்றது'' என்ருள் லீலா அக்கா.

''சரி, நீ இங்கேயே இரு. நான் பார்த்துவிட்டு வருகின்றேன்'' என்று எழுந்தார் ரகுநாதன்.

''ஐயையோ, நீங்களா? இந்த இடத்தைவிட்டு ஒரு அடி கூட அசையக்கூடாது. உங்களுக்கு ஏதாவது ஒன்று நேர்ந்துவிட்டால் என் கதி என்ன? நான் போய் அந்த பெனியன் தம்பியை எழுப்புகின்றேன்'' என்ருள் லீலா அக்கா

''என்ன லீலா, ஒன்றுமில்லாத விஷயத்துக்கு இருப்பவர்களையெலாம் ஏன் தொந்தரவு செய்கின்ருய்?'' --கடுமையான தோரணையில் அன்பாகவேகேட்டார்.

''அவசரத்துக்கு இதையெல்லாம் பார்க்க முடியுமா?" என்ற லீலா அக்கா அடுத்தநிமிடம் என் அறைக் கதவை வந்து தட்டிஞள். நான் தூங்குவது போல பாசாங்கு செய்துகொண்டு ''யாரது''என்றுகேட்டேன்.

''நான்தான் தம்பி! கொஞ்சம் கதவைத்திற!'' பதைபதைத்தாள் லீலா அக்கா.

''அட, லீலா அக்கா வா, இதோ வந்திட்டேன். என்னக்கா வேண்டும்? ராஜினியா? அவள் இங்கேதான் தூங்குகின்ருள்'' — ஒன்றும் தெரியாதவன் போல் கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தேன். லீலாஅக்காவின் முகமெல்லாம் வியர்த்திருந்தது. கொட்டும் பனியில் நிற்பதைப்போல் நடுங்கிக் கொண்டு நின்ருள்.

''நம் வீட்டுக்குத் திருடன் வந்து விட்டான் தம்பி. நான் போய் சரோஜா, பாமினி...எல்லோரையும் எழுப்புகின்றேன். நீயும் ஓடிப்போய் அந்தப் பொன்னையா தாத்தாவையும் உன் சினேகிதர்கள் மணியம், கோபால் எல்லோரையும் சீக்கிரம் கூட்டிக் கொண்டு வா'' என்று கட்டளையிட்டாள் லீலா அக்கா. அடுத்த கணம் அடுத்த வீட்டுக் கதவைத் தட்டுவதற்கு ஓடிஞன். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆனுல் அடுத்த நிமிடம் அவள் கட்டளையை நிறைவேற்றினேன்.

ஐந்து நிமிடங்களில் லீலா அக்கா வீட்டில் ஒருபட்டாளமே கூடி விட்டது.

வந்தவர்களெல்லாம் ஒரே பரபரப்பாக இருந்தார்களே ஒழிய ஒருவருக்காவது சமயலறைக்குள்ளே செல்லத் துணிவில்லை. சிறிது நேரம் எல்லோரும் அமைதியாக இருந்து அந்தச் சப்தத்தைக் கவனித்தோம். படபடவென்று பாத்திரங்கள் சரிந்து விழும் ஒலி கேட்டது. லீலா அக்காவுக்கோ மூச்சே நின்று விடும் போலிருந்தது.

''இது நிச்சயமாகத் திருடன் தான்'' என்று கூறிய பொன்னையாத்தாத்தா திருடர்களைப் பற்றித் தன் அநுபவத்தில் அறிந்தவற்றை அளக்கத் தொடங்கிஞர்.

''இவன் மூளையில்லா முட்டாள் போலல்லவா இருக்கிறது. இவ்வளவு நேரத்தில் தப்பி வெளியே ஓடி [illegible] கோபால் வியாக்கியானம் செய்தான்.

அரட்டை அடித்துக் கொண்டிருந்தால் காரியம் நடக்காது என்று எண்ணி ''வாங்க உள்ளே போய்ப் பார்க்கலாம்'' என்று ரகுநாதனை அழைத்தேன். அவ்வளவுதான் அடுத்த விஞடி லீலா அக்கா ரகுநாதனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ''ஐயோ, நீங்கள் இங்கேயே இருங்கள். திருடன் உங்கள் மீது கத்தியை வீசி எறிந்து விட்டால் பின்பு நானும் குழந்தையும்என்னஆவது?'' என்று புலம்பிஞள்.

லீலா அக்காவின் பரிதாப நிலையைக் கண்டு சகிக்கமுடியாமல் ரகுநாதனை அங்கேயே இருக்கச்சொல்லி விட்டு, பொன்னையா தாத்தாவுடன் நானும், மணியனும், கோபாலும் சமயலறைக் கதவண்டை சென்று நின்று கொண்டு உள்ளிருந்து வரும் ஒலியைக் கவனமாகக் கவனிக்கத்தொடங்கிஞேம் வந்திருந்த பெண் 'புலி' களும் ஏதோ வேடிக்கை பார்ப்பது போல எங்களுக்குப் பின்ஞல் வந்து தயங்கித் தயங்கி நின்று கொண்டிருந்தனர், சில விநாடிகளின் பின் பாத்திரங்களை உருட்டும் ஓசை பலமாகக் கேட்கத் தொடங்கியது. கதவின் இடுக்குகள் வழியாகப் பார்க்கலாம் என்ருலும் உள்ளே விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன.

இறுதியாகப் பொன்னையா தாத்தா, ''இந்தாய் யா— யாராக இருந்தாலும் வெளியே வந்து விடு. உனக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து விடுகிரேம்...'' என்று திருடனுக்குச் சமாதான மொழிகள் கூறிஞர். உடனே கண்ணுடி டம்ளர்கள் விழுந்து நொருங்கும் ஓசையும், பாத்திரங்களை மேலிருந்து போட்டு உடைக்கும் ஒலியும் கேட்டது. அடேயப்பா!— அடுத்த விஞடி எல்லோரும் ஐயோ என்று அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தார்களே, பார்க்க வேண்டும். லீலா அக்காவைப் பற்றியோ சொல்லத்தேவையில்லை.

எல்லோரும் மூச்சு வாங்க இதயத்தை அமுக்கிப் பிடித்துக் கொண்டு மீண்டும் வெளித் திண்ணையில் அமர்ந்து கதை பேசலாயினர். கால்மணி நேரத்திற்குப் பின் மறுபடியும் எல்லோரும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு உள்ளே சென்று கதவருகே நின்று கொண்டோம். இராமபிரான் கானகம் செல்ல வேண்டி அயோத்தியை விட்டு நீங்கும் போது அவர் பிரிவாற்ருமை பொறுக்காத பெண்கள் துயரம் அதிகரிக்க அவர்கள் உடலை அலங்கரித்துக் கொண்டிருந்த முத்தும், இரத்தினமும் சிந்தி, தரை முழுவதும் சிதறிக் கிடந்தாற்போல நம் 'பெண்புலிகள்' ஓடி வந்த வேகத்தில் முடி மயிரும், ரிபன்களும், கொண்டை 'ரிங்' குகளும், வாடிய பூக்களும் தரையைச் சரணடைந்து வெளிப்புறத் திண்ணையிலிருந்து சமயலறைக் கதவுவரை சிதறிக்கிடந்தன, நாங்கள் மறுபடியும் திருடனுக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் போது அவர்கள் சிதறுண்ட தம் செல்வங்களைப் பொறுக்கும் வேலையில் ஈடுபட்டார்கள்.

''சரியப்பா, வெளியே வருவதாயிருந்தால் 'உம்' என்று அங்கிருந்து ஒரு வார்த்தை சொல்லிவிடு, நாங்கள் கதவைத் திறந்து விடுகிரேம்'' என்று கூறி நான் தாழ்ப்பாளில் கையை வைத்தேன். அடுத்தகணம் முன்போலவே ''கணீர் கணீர்'' என்று ஓசைவந்ததோடு கதவையும் உள்ளேயிருந்து இடிக்கும் ஓசை கேட்டது. நாங்கள் எல்லோரும் 'ஒலிம்பிக்' வேகத்தில் வாசலை நோக்கி ஓட்டமெடுத்தோம்.

பத்திரகாளி வேஷத்தில் பாண்டியனிடம் நீதி கேட்கப் போஞளே கண்ணகி— அந்தக் கோலத்தில் லீலா அக்கா காட்சியளித்தாள்.

''வாங்க தம்பி! என்னதான் நடக்குமென்று பார்த்துவிடலாம். இந்தத் திருட்டுப்பயலுக்கு நாம் ஏன் இப்படிப் பயந்து நடுங்கவேண்டும்'' என்று கூறிய லீலா அக்கா எங்களை உள்ளே அழைத்தாள். அவளைப் பார்த்து விட்டு இந்தப் பூனை எப்படிப் புலியாகமாறியது என்று எல்லோரும் மூக்கின்மேல் விரலை வைத்தோம்.

''பயம் அளவுக்கு மீறிப் போஞல் அதுவே வீரமாக மாறிவிடும். இது மனத்தத்துவஉண்மை'' என்றுபாமினி சொன்ஞள்.

"இதற்கு இப்படித் தாளம் போடும் நம் ஆண்சிங்கங்கள் சிலவேளைகளில் நம் நாட்டைக் காப்பதற்கு போரிட நேர்ந்தால் என்ன செய்வார்கள்'' என்று சரோஜா ஜாடையாகத்தாக்கிஞள்.

''எல்லாம் காட்டவேண்டியதைக் காட்டிவேண்டிய இடத்தில் காட்டிப்பெற வேண்டிய இடத்தில் பெறுவதுதான் எம்போன்ற வீரர்களுக்கு அழகு'' என்று; யாரோ ஒரு அரசியல்வாதியின் அடுக்கு மொழிகளைச் சிறிது மாற்றிச் சமயம் பார்த்து முழங்கிஞன் கோபால்.

(9ம் பக்கம் பார்க்க)

---

மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுப் போட்டியில் 'அன்புள்ள அம்மாவுக்கு' என்ற கவிதையை எழுதி இவ் வருடத்துக்கான வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றிருக்கிருர் செல்வன் பெரி. சண்முகநாதன்.

சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் அண்மையில்தான் கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரியில் மதிப்பீட்டுத்துறையில் விசேஷ பயிற்சிக்காகச் சென்றுள்ளார். 19 வயதான இளைஞர். ஈழத்திலிருந்து வெளியாகும் அநேகமான பத்திரிகைகளிலும் கட்டுரை, கதை, கவிதைகள் எழுதியுள்ளார் இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு என்பதை இவர் பெற்ற சாகித்தியமண்டலப் பரிசு எடுத்துக்காட்டுகிறது.

---

## உலக பேஞ நண்பர் கழகம்

உலகத் தமிழர்களோடு தொடர்புகொள்ளும் நோக்கமாகவும், உலக நாடுகளில் தமிழ்மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை அறிமுகப் படுத்தும் நோக்கமாகவும், 'உலக பேஞ நண்பர் கழகம்' ஒன்று கலைச்செல்வம் நூலகம் 43, நுவரேலியாவழி, வெளிமடை என்ற விலாசத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தமிழன்பர்கள் மாத்திரமல்லாது ஏனைய பிற இனத்தவர்களும் பேஞ நண்பர்களுடன் தொடர்புகொள்ள இவ் விலாசத்துக்கு எழுதலாம்.

---

ராக்ரர்களுக்கு ...
ராக்ரர் உறுப்புகளுக்கு ...
இன்னும்
ராக்ரர் றிப்பயர்களுக்கு
ராஜா கோப்பரேஷன்
பரந்தன்

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
பெனியன்கள்
ஸ்போட் சேட்டுகள்
ரி சேட்டுகள்
கால்மேசுகள்
(Nylon & Cotton)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருகண மனிதன்

உண்டகளைப்புத்தீர, சிறிது உலாவ எண்ணி படலையைத் திறந்து கொண்டு வீதியில் கால்வைத்தபோது, முதலில் என்கண்களில் தென்பட்டவன், சுந்தரம்.

''ஏய், சுந்தரம்......!''

நான் நின்றதைக் கவனியாமல், வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு என்னைக் கடந்து கொண்டிருந்த அவன் ஒரு கணந் தயங்கி என்னைப் பார்த்தான்.

அழுக்கடைந்த சாரம், இனி அழுக்கடைய அதிலிடமில்லை; சாரத்தோடு போட்டிபோடுவது போன்றதொரு சேட்; அதற்கு ஒரு கையும், இரண்டு பொத்தான்களுமில்லை; அடிப் பொத்தானை மூன்றுவது ஓட்டையில் மாட்டியிருந்தான்.

செம்பட்டைத்தலை மண்ணும், புழுதியும் படிந்து, எண்ணை காணுது, காடாகக்கிடந்தது; அவன் நல்ல சிவப்பு; புழுதி அவனைக் குளிப்பாட்டி வெண்மை படரவைத்திருந்தது. ஆழப் பதிந்த, ஒடுங்கிய கண்களால் என்னைப் பார்த்தான்.

''சுந்தரம், உன்னைத்தான்!''

வலது கையால் தலைக் காட்டைக்கிளறியபடி, நிலத்தைப் பார்த்தான். பின் தலைநிமிர்ந்தது.

''என்ன வேணும்...?''

''ஒன்றுமில்லை, சுந்தரம்! அந்தச் சல்லிக்கல்லை அள்ளி உள்ளுக்குப் போடிறியா?''

என் கைவிரல் சுட்டிக்காட்டிய இடத்தை அவன் பார்த்தான்; வீடுகட்டி முடிந்து, எஞ்சிய சல்லிக்கல் வேலியோரத்தோடு பெரிய ஒரு கும்பலாகக்கிடந்தது.

எனது வீட்டிற்குமுன் இருப்பது அம்மன் கோவில் ஒன்று; வருடா வருடம் நடைபெறும் திருவிழா ஆரம்பமாகிவிட்டபடியால், வீதியில் குவிந்திருந்த கல், அம்மன் வெளிவீதி வரும்போது தடையாக இருந்தது. அதனுல், அதனை அகற்றிவிட முயன்றேன்.

கதிரையில் உட்கார்ந்து. மேசையில் இருக்கும் காகிதத் தளத்தில் கிறுக்கித் தள்ளும் உடல் வளையுமா?

''என்னுல் முடியாது!'' என்ருன், சுந்தரம்; அவன் நடந்து சென்ருன்.

''ஏய், சுந்தரம்...!''

மலிவாக அகப்பட்ட கூலியை இழந்துவிடுவதா?

அவன் ஏனே திரும்பிவந்தான்:

''எவ்வளவு தருவீர்...?''

''ஒரு ரூபா தாரன்! சீக்கிரம் அள்ளிப்போடு...!''

''ஏமாற்றிவிடமாட்டீரே?''

அவன் குரலில் அத்தனை இரக்கமா? அவனை நான் பார்த்தேன். குழிவிழுந்து ஒடுங்கிய அக் கண்களில் ஏமாற்றத்தின் கோடுகள். பாவம், அவன். அவனிடம் வேலைவாங்கிவிட்டு, கூலி கொடுக்காமல் ஏமாற்றிவிட்டவர்கள் பலரோ?

''நான் ஏன் அப்பா ஏமாற்றுகிறேன்! நீ அள்ளிப்போடு!...''

அவன் முகத்தில் மலர்ச்சி.

''சுறுக்காக் கடகத்தையும் மம்பட்டியையும் கொண்டு வாரும்...!''

கொண்டுவந்து கொடுத்தேன்.

''இது நல்ல மம்பட்டியே? கல்அள்ள நல்ல இறுக்கமாக இருக்கவேணும்...!''

கடகத்தையும், மண்வெட்டியையும் தூக்கிக்கொண்டு கல்கும்பத்தை நோக்கிச் சென்றவன் திரும்பிவந்தான்:

''இதை எவ்வளவு நேரத்திலை அள்ளலாம்? அள்ளிப் போட்டிட்டு, கடையிலை போய்ச் சாப்பிட்டுட்டு ... இஞ்சை! கொஞ்சம் கோப்பி தரச் சொல்லும்!''

''தரச் சொல்லுறன்! நீ போய்க் கெதியாக அள்ளு ..!''

நான் உள்ளே வந்து அம்மாவிடம் கோப்பி போடும்படி கூறினேன். அம்மா சிரித்தாள்:

''நல்ல விசரன்தான் உனக்குக் கல் அள்ள அம்பிட்டான்! இந்த 'லூசை' எங்கை கண்டனி...?''

சுந்தரம், நாலைந்துகடகம் சல்லிக்கல் அள்ளி உள்ளே கொட்டிவிட்டான்.

''இதிலை கனக்கக்கல்லுக் கிடக்குது போலை இருக்கு! அள்ளேலாது போலை இருக்கு...!''

''என்ன, சுந்தரம்! சோர்ந்து போனுய், நாலு கடகத்தோடை! வேலைசெய்தால் தானே காசு கிடைக்கும்! சாப்பிட்டிட்டு படம் பாக்கலாம்...!''

''ஓமோம்...! வேலை செய்தாத்தானே காசு தருவினம்! சும்மா ரேட்டாலை திரிந்தால் ஒரு ரூபா தருவினமே! ஏன் அவை தருகினம்...! இஞ்சை! இதை அள்ளிப் போட்டா எவ்வளவுதருகிறதெண்டனீர்?''

''ஒருரூபா... எத்தனைதரம் சொல்கிறது?''

அவன் கல்லை மண்வெட்டியால் வழித்துக் கடகத்திற்குள் நிரப்பினுன்; நான் தூக்கிவிட்டேன்.

''ஒரு ஐம்பதுசதம்கூடத் தாரும்! அப்பதான் சாப்பிட்டிட்டு, படமும் பார்க்க முடியும்...!''

''அதெல்லாம், தாறன் அப்பா! கொண்டுபோய்க் கொட்டி விட்டுவா...!''

அவனைப் பார்க்கப்பரிதாபமாக இருந்தது; நான் கடகத்திற்குள் கல்லை நிரப்பித் தூக்கிவிட்டேன்; ஒவ்வொரு கடகத்தையும் தூக்கும்போது, ஏதேதோ வெல்லாம் பேசுவான்.

''ஆறுமணிக்கே படம் துவங்கிறது? இங்கிலிசுப் படந்தான் பாக்க வேணும் !''

''எங்கை போய்ப் பார்க்கப் போருய்?''

''நான் மனேகராக்குத்தான் போறனுன்! கொஞ்ச நாளைக்கு முதல் அதிலை சோக்கான ஒரு இங்கிலிசுப் படம் ஒடினது...!''

சல்லிக்கல் கடகம் தலையில் ஏறியது.

''இவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்த காசை வீணுப் படம் பார்த்துச் செலவழிக்கக் கூடாது, என்ன? நல்லாச் சாப்பிட்டால் நல்லது! நீங்க ஒரு இரண்டு ரூபா தந்திடுங்கோ.. ?''

கல்லைக் கொட்டிப்போட்டுத் திரும்பிவந்தான், சுந்தரம்:

''என்ரை காசைத் தராமல், எடுத்திடாதையும்! வீண்பழிதான், கிடைக்கும்...!''

எனக்குச் சிரிப்புவந்தது:

''உன்ரைகாசை நானேன், எடுக்கிறன்! நீ வேலையைச் செய்... அப்பத்தான் படம் பார்க்கலாம்...''

மண்வெட்டி கல்லை விருண்டியது.

''உங்களிட்டை ஏதாவது நல்ல சேட் இருக்குதே? எனக்கொண்டு தாறியளா?''

''உனக்கேனப்பா, சேட்...?''

''போடத்தான்! நல்லாப் போட்டாத்தானே நல்லது! எனக்கொரு மோதிரம் செய்யவேணும்...?எவ்வளவு முடியும்.. ? கையிலே ஒரு உறுலோசும்கட்ட வேணும்.. அப்பதான் மாப்பிள்ளை மாதிரி இருக்கும்...!'' கடகத்திற்குள் சல்லிக்கல்லை, வாரிப் போட்டபடி, தொடர்ந்தான்;

''தேகமெல்லாம் சரியான ஊத்தையாகக் கிடக்குது இண்டைக்கு எங்கையாவது குளிக்சுத்தான் வேணும் படத்துக்கு நேரம் சென்று போடுந்தான்... நீங்க கட்டாயமாகக் காசு தருவியள் தானே? பழி, என்ரைகாசை எடுத்தால்...! ஒரு இரண்டு ரூபா தந்திடும்...கஷ்டப்பட்டாத்தானே உழைக்கலாம்...''

அம்மா போட்டுக் கொடுத்த கோப்பியைக் குடித்தான்; குடித்துவிட்டு என்னைப் பார்த்தான்:

''இவ்வளவு கல்லையும் விட்டுட்டுப் போகட்டுமே .. பஞ்சியாகக்கிடக்கு...!''

''என்ன, சுந்தரம்! இன்னும் ஒரு பத்துப் பன்னிரெண்டு கடகம்தானே...? கம்பு போல அள்ளிப் போட்டிட்டுக்காசை வேண்டிக் கொண்டுபோவன்...!''

தன் தோளில் படிந்திருந்த மண்ணைத் தட்டிவிட்டான்.

''அப்ப நீங்க என்ன நிறத்திலை சேட்டுத்தருவியள்...?''

''ஒரு சிவத்தச் சேட்டுத் தாறன்...!''

''சிவப்புக்கூடாது ... வடிவாயிராது! வெள்ளையிலே சிவப்பாத்தாரும்...''

''சரி, தாறன். நீ கெதியாக அள்ளு !''

மேலும், சில கடகங்கள் அள்ளப்பட்டு உள்ளேகொட்டப்பட்டன. அவன் தனக்குள் பலவற்றையும் முணுமுணுத்துக் கொண்டான்;

(4ம் பக்கம் பார்க்க)

'செங்கை ஆழியான்'

ஞாயிறு கதை மலர்

# ஆவணி முகூர்த்தம்

"ஏதோ நடந்துபோனது போகட்டும்; இனிச்செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி யோசி'' என்று முருகேசுச் சிருப்பர், மீசையை முறுக்கிக்கொண்டு, கோபத்தோடும் ஆச்சரியத்தோடும் கூறினுர். ''அந்த புரோக்கன் எங்கே? அவனைக் கூப்பிடு'' என்ருர் செல்லத்துரை ஓவர்சியர்.

''புரோக்கனை இங்கே எதற்கு? அவனுடைய பேச்சைக் கேட்டுத்தானே, இந்த நிலைமை நமக்கு ஏற்பட்டது'' என்று ஐயம்பிள்ளைச் சட்டம்பியார் கவலை தொனிக்கும் குரலில் கூறிவிட்டுச் சுருட்டைச் சப்பித் துப்பிக்கொண்டு நின்ருர்.

ஆவணிமாதத்தில் ஒரு கடுமையான முகூர்த்த தினம். நேரம் இரவு சுமார் பதினெரு மணி இருக்கும்; பன்னிரண்டு கார்களில் முதற் காரில் மாப்பிள்ளை பல வரிசைகளுடன்; மாதகலில் ஓர் ஒழுங்கைக்குள் கார் வெளிச்சங்களை எல்லாம் அணைத்துவிட்டுக் கார்களுக்குள் எல்லோரும் ஏங்கிப் போய் இருந்தார்கள். கார்களெல்லாம் பெண்வீட்டிலிருந்து சுமார் நூறுயார்

கல்யாணத்துக்குத்தயாரான பெண்ணினது தந்தையாரும், காருக்குச் சமீபத்தில் வந்து கலங்கிய மனத்தோடு ''நாங்கள் என்ன செய்வோம்? எல்லாம் தலைவிதி; நாலு மணிக்கே பெண்ணைநீராட்டி அலங்காரம்பண்ணி வைத்திருந்தோம். ஆறுமணியளவில் எனது மகனும் புத்தளத்திலிருந்து வந்துவிட்டான். அவன் போய்த் தனது தங்கையைத் தேடிய போதுதான், எங்களுக்குச் சங்கதி தெரியவந்தது.'' இரண்டுபேரும் அழுது கொண்டு சொன்னுர்கள். கல்யாணக்கோலத்தோடு விளங்கிய பெண்ணின்வீடு இப்போது செத்தவீடுஆகிக் கிடந்தது. பெண்பிள்ளையின் தாயார் பெரும் அவலக்குரலெழுப்பி தனது மகள் என்னவாருளோ எனப் புலம்பிக் கொண்டிருந்தாள்

இராமலிங்கம்பிள்ளை அடைவுக்கு நகைபிடிப்பவர்; பணம் வட்டிக்குக் கொடுப்பவர்; நல்ல மனிதர்; தனதுமகள் தனபாக்கியத்தை, நல்ல உத்தியோகம் பார்க்கும் ஒருவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று படாதபாடு பட்டார்.

— "பிறைசூடி" —

தூரத்திலே நின்றன. விளக்குகள் அணைந்தபடி முருகேசுச் சிருப்பருடைய பெரிய காருக்குள் ஐயம்பிள்ளைச் சட்டம்பியாரும் செல்லத்துரை ஓவர்சியரும், மேற்கூறிய சம்பாஷணையை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள் புரோக்கர் எனப்படும் கல்யாணத்தரகர் சின்னத்துரையும்,

புரோக்கர் சின்னத்துரைக்கு எவ்வளவோ எல்லாம் உபகாரஞ்செய்து கடைசியில், முருகேசுச் சிருப்பருடைய மகன் குமாரசுவாமிக்கு கல்யாணம் நிச்சயமாகி, எல்லாவிஷயங்களையும் ஒழுங்காக்கியிருந்தனர். குமாரசுவாமிக்கோ நல்ல உத்தியோகம். இரவு பத்துமணிக்குத் தாலிகட்டுவதென்று முகூர்த்தம் குறித்து முருகேசுச் சிருப்பர் பத்துக்கார்களில் தமது பந்துக்களோடு பெண்பிள்ளை வீட்டிற்குப் போகும்வழியில் லாந்தர் விளக்குகளோடு வழியில் வந்த சிலர் கார்களைநிறுத்தி ''பெண்ணைக் காணவில்லை என்று ஒரே கூப்பாடாயிருக்கு. உங்கே ஏன் நீங்கள் போகின்றீர்கள்'' என்று கூறினுர்கள். இதைக் கேட்டவுடன் எல்லோரும் ஸ்தம்பித்து விட்டனர். பெண்ணின் தந்தை இராமலிங்கம் முருகேசுச் சிருப்பருடைய காருக்குள் தலையை நுழைத்து அழுதே விட்டார். பெண்ணைத் தேடி நாலாபக்கமும் ஆட்கள் போய்க் கொண்டிருந்தனர். சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளுடன் பெண் காணுமற் போனுல், யார் தான் பேசாமலிருக்க முடியும்? இராமலிங்கம்பிள்ளை தனது ஒரேபுத்திரி இப்படிப் போய் விட்டாளே என்ற கவலையில் சிந்தைநொந்து வாடிக் காருக்குள்ளே வீழ்ந்துவிட்டார். உடனே இராமலிங்கம்பிள்ளையின் தம்பி விசுவலிங்கம், அண்ணனை அப்படியே தூக்கியணைத்து நடத்திவீட்டுக்குள்கொண்டு போய் ''அவள் எங்கே [illegible] செல்லையாவையும் காணவில்லையாம்; இரண்டுபேரும் எங்கேயாவது ஒளித்திருப்பார்கள். எல்லாம் விடியத் தெரிந்துபோகும்தானே. இதெல்லாம் ஒரு வில்லங்கமா? பார்க்கப்போனுல் செல்லையன் உங்கள் மருமகன்தானே'' என்று சமாதானங் கூறி இரண்டு தம்ளரில் கோப்பி ஊற்றிக் கொடுக்க, இராமலிங்கம் பிள்ளை துள்ளிக் கொண்டு எழும்பிவிட்டார்.

இதற்குள் புரோக்கர் சின்னத்துரை முருகேசுச் சிருப்பரிடம் ''என்ன ஐயா ஏதோ நான்வேண்டுமென்று செய்தமாதிரி என்மேல் கோபிக்கின்றீர்கள். நான் என்னுல் இயன்றவரை உங்களுக்கு ஏராளமான பொருள் சீதனமாக வேண்டித் தந்தேன். வேறு நான் என்னதான் செய்யலாம்?'' என்று அனுதாபத்தொனியுடன் கூறினுர். ''அது சரி; இப்போது நாங்கள் எப்படி வீட்டுக்குப் போகிறது? எல்லோரும் என்னை என்னவென்று சொல்லுவார்கள்'' என்று சிருப்பர் பிரலாபித்தார். ''சரி, நான் இப்போது ஒரு பெண் தருகிறேன், ஆனுல் சீதனம் ஒன்றும் கிடையாது; நல்ல பரம்பரை, சாதி, ஒழுக்கம்; அத்துடன் நிரம்ப வடிவான பெண்'' என்ருர் புரோக்கர். உடனே சிருப்பர் ''ஆட்கள் எப்படி?'' என்று கேட்டார். ''அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம்; ஆனுல் ஒன்று, கமக்காரர்; மிகவும் ஒழுங்கான [illegible]ர்கள்; இந்த முகூர்த்தத்திலேயே கல்யாணஞ் செய்யலாம்'' என்று சின்னத்துரை கூற, உடனே எல்லாக்கார்களும் திரும்பி ஊரெழு ரேட்டுவழியே உரும்பராயை நோக்கிப் புறப்பட்டன.

கந்தையா, உண்மையிலேயே நல்ல மனுஷன். கமக்காரன்; சுருட்டுத் தொழிலுக்கும் போகிறவர்; குடும்பம் பெருத்துக் கொண்டுவந்ததில், கந்தையாவின் ஊதியம் குடும்ப சம்ரட்சணைக்குப் போதவில்லை. ஆனுல் முத்தம்மா கந்தையாவின் மனைவி-மிகக் கெட்டிக்காரி; நாலு பெண்பிள்ளைகளையும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி நல்ல கல்வியும் பிள்ளைகளுக்குக் கற்பித்திருந்தாள். கந்தையாவின் வீட்டில், கந்தையா, கந்தையாவின் தாய்க்கிழவி, மனைவி முத்தம்மாள், முதலியவர்களோடு நாலு பெண்பிள்ளைகளும் குடும்பத்தில் இருந்தார்கள். கந்தையா வீண்டாம்பீகமில்லாமல் ஒழுங்காகக் குடும்பத்தை நிர்வகித்து நடத்தி வந்தார்.

இரவு பன்னிரண்டு மணிக்கு கந்தையாவீட்டுக்கு முன்னுல் கார்களெல்லாம் ஒழுங்காக எவ்வித ஓசையுமின்றி நிறுத்தப்பட்டன. சின்னத்துரை காரிலிருந்து இறங்கிவந்து கந்தையாவின் தட்டிப் படலையைத்திறந்து கொண்டு ''கந்தையா அண்ணே! கந்தையா அண்ணே!'' என்று கூப்பிட்டார். கந்தையா அன்று தோட்டத்தில் வேலைசெய்த களைப்பில் தன்னை மறந்து ஆழ்ந்து தூங்கிக்கொண்டி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாழ்ப்பாணச்சாமி'யின் அருளுபதேசம்

"அனதி அருட்சீடன்" எழுதுவது

## குரு வணக்கம்

''பாவியரைக்கரையேற்றும்
ஞானத்தோணி,
'பரமபதவாயிலெனும்
பார்வையாளன்''
என்றுனை மோனகுரு
வாகப் பாரதி பரவி,
அன்று
யாப்பாடி ஷைவ த்[illegible]தழ்ான
''யாழ்ப்பாணத் தீச''
னென்றும் உனை
பாரதிக்கு[illegible]மங்களஞ்சேர்
[illegible]திருவிழியால் அன்று
அருளளித்தாய் குருவே
வணக்கம்.

நித்தமும் நான் உந்தன்
நாமம் நீங்காமல்
கொண்டலைந்தேன்
நான் எப்பேறு பெற்றே
னென்று தனிமை கண்டு
மிகவும் நொந்தேன்
அன்றொரு நாள் அர்த்த
ராத்திரி சயனத்தில்
என் அசைவெலாம்
ஒய்ந்தருளை நோக்க
ஒய்தல் போக்கிப் பாக்
கவி பாடித்தொழவும்
அருளளித்தாய் அநாதி
காட்டிக் குருவே
வணக்கம்.

அருளம்பல மோனத்தின்
நிலைதனையும் உணர்த்தி
நன்கு வைத்தாய்
என் சிறந்த குருவாய்
வந்த சுவாமி மோனம்
அருளம்பலம் என்ற
கோவே
எனை அன்றுமின்றும் என்
றும் அநாதிப் பரவெளி
யில் திளைக்க வைத்து
தீர்க்க தரிசனமெனாம்
புகன்று, உரு அரு அற்று
அ ாதியானுய்குருவே
வணக்கம்

எந்தை பரமவன் போல்
பல சற்குருநாதர் என்
வாழ்வில் வந்தார்
மோனகுரு அருளம்பலம்
என் சிரேட்ட அந்த
குருவானார் அநாதிகாண
அநாதிப் பண் கண்டு நான்
நடைகொண்ட போதும்
பலவிதம் வணங்கிப்
பாரார்க்குப் பண்புகாட்டி
இயன்ற தொழில்
கொண்டு பசுவாக
வாழ்கின்றேன்.

## குருநாதர் வேண்டும்

அநாதியைக் காண்பதற்கு
அதற்கொரு சற்குரு
நாதன்
அருகே வேண்டும், தேடி
நான்
அவனியிற் செய்தி பார்த்
தேன் அக்குருத்
தொனியேயில்லை
அகம் மிகவாடி மீண்டும்
நான்
அகத்திலே தேடி நிற்க
வந்தெனை ஆட்
கொண்டருதியில்நிற்க
அன்று வைத்த மோன
குருவை நாடிநான்
அவரின் நாமம் கேட்க,
அருளம்பலமாகத்
திகழக்கண்டேன்
அநாதிக் குருவை நாடி
நின்று உய்குவீர்
மகிழவே தான்.

பதி பசு பாசம் மூன்றும்
பகுத்துணர்ந்தொழுகு
வார்மெய்
ஞான சற்குரு காண்
பதியென்பதெல்லையற்றுப்
பார்க்குமிடமெங்கு
முள்ள
சுத்த அநாதி வெளி
காண்

( 9-ம் பக்கம் பார்க்க)

## ஆவணி முகூர்த்தம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தார். புரோக்கர் கூப்பிட்ட சத்தத்தைக்கேட்ட மூத்தம்மா உடனே கந்தையாவை எழுப்பிவிட்டாள். வெளியே வந்த கந்தையா சின்னத்துரையைக் கண்டு ''எனப்பா, இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?'' என்று கேட்க, 'தேவையிருந்தால் எந்த நேரத்திலும் வரவேண்டியது தானே' என்று உள்ள விபரங்களெல்லாவற்றையும் புரோக்கர் கூறினர். கந்தையா தனது மனைவியைக்கூப்பிட்டு விஷயத்தைச் சொல்ல, மனைவி மிகக் கெட்டிக்காரியானபடியால் வந்த மாப்பிள்ளையை இழந்து விடக்கூடாதென எண்ணினுள். மூத்தம்மா சின்னத்துரையிடம் ''சின்னத்துரை அண்ணே! எங்களுடைய நிலைவரமெல்லாம் உங்களுக்குத்தெரியும்தானே'' என்று சொல்லுவதற்குள் முருகேசுச்சிறுப்பர் ''அது ஒன்றும் நீங்கள் சொல்லவேண்டாம். முகூர்த்தத்திற்கு இன்னும் இரண்டு மணிநேரந்தான் இருக்கிறது. ஆனபடியால் உடனேபோய் நாங்கள் நகைகளைப் பெற்றுக்கொண்டு, பணிக்கடை முதலாளி மாணிக்கத்தின் கடையில்வேண்டியபொருட்களையும் பெற்றுக்கொண்டு வருவோம். நீங்கள் இங்கே நடக்கவேண்டிய அலுவல்களைக் கவனியுங்கள்'' என்று கூறிவிட்டு நாலுகார்களில் ஆட்கள் புறப்பட்டார்கள்.

இதற்குள் கந்தையாவின் பக்கத்து வீட்டிலுள்ள சொந்தக்காரர்களுக்கு முத்தம்மா விஷயத்தைச் சொல்லி அனுப்பினுள். எல்லோரும் வந்து மகிழ்ச்சியுடன் சமையல் முதலிய வேலைகளை நடத்தலாயினர். குருக்கள் நாலு மணிக்கே வந்துசேர்ந்துவிட்டார். ஓமம் வளர்த்து பிள்ளையார் பூசையுடன் செல்விகற்பகத்துக்கும்குமாரசுவாமிக்கும் திருமணம் இனிது நிறைவேறியது முருகேசுச் சிறுப்பர் சுமார் காலை ஆறுமணிக்கு மேளதாளத்துடனும், சகல வரிசைகளுடனும் மாப்பிள்ளை பெண்பிள்ளையோடு தனது வீட்டிற்குத்திரும்பினர்.

திருமணத்துக்கு சமூகமளித்த விருந்தாளிகளெல்லோரும் மணமக்களை வாழ்த்தினர்கள். குமாரசுவாமிக்கு கற்பகத்தை விவாகஞ்செய்தபின் உத்தியோகம் உயர்ந்தது. கந்தையாவின் மற்ற மூன்று பெண்பிள்ளைகளும் தக்க காலத்தில் நல்ல இடங்களில் மணஞ்செய்து இனிதாக வாழ்க்கையை நடத்துகின்றூர்கள். கந்தையாவும் இப்போது உருத்திராக்கம், விபூதி முதலியன தரித்துச் சிவபக்தியில் ஈடுபட்டு தலயாத்திரைகள் செய்து வருகின்றூர். செல்லையனே இராமலிங்கம்பிள்ளையின் சொத்தையெல்லாம் வீணில் விரயஞ்செய்துவிட்டு இப்போது குமாரசுவாமியின் கார் 'டிரைவர்'க வேலை செய்கின்றூன்.

(யாவும் கற்பனை




அழகினுக்கு
மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும்
எண்ணெயை அகற்றி,
சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான
யௌவன வனப்பை அளிப்பது
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள். கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமத்தை மிருதுவாக்கி. பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும். அகன்ற மயிர்க்கண்களையும் மறைத்து. சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்ருதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்கமற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து நிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக் கிரீமை அடித்தளமாக பாவியுங்கள்.




சருமத்திற்கு புதியதோர்
மெருகூட்ட
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிசயத் திருடன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து நிமிடம் எல்லோரும் ஒய்வெடுத்துவிட்டு மறுபடியும் எங்கள் படையைத்திரட்டிக்கொண்டு சமையலறையாகியபோர் முனையை நோக்கிப் புறப்பட்டோம். ''என்னதான் நடக்கும் நடக்கட்டுமே...'' என்ற சினிமாப் பாட்டை கோபால் முணுமுணுத்துக்கொண்டே வந்தான். ஆனால் லீலா அக்காவை மட்டும் வெளியே இருக்கும்படி கேட்டுக் கொண்டோம்.

"இந்தாய்யா, இதுதான் கடைசி எச்சரிக்கை. இப்போதாவது வெளியே வருகிருயா இல்லையா? பொலிசைக் கூட்டிவரவா?'' என்று பொன்னையா தாத்தா கர்ஜித்தார். நாங்கள் ஒவ்வொருவரும் சிவாஜி கணேசனின் கட்டபொம்மன் வசனத்தைக் கொஞ்சம் உரக்கச்சொல்லி எங்களைத்தெரியப்படுத்திக்கொண்டோம். மறுபடியும் வெங்கலக்கடையில் யானை நுழைந்தாற்போல், உள்ளேயிருந்து''கடபுட'' ஒலி. எல்லோரும் திரும்பவும் ஒலிம்பிக்ரேஸை ஆரம்பித்தோம். நாங்கள் உள்ளே செல்வதும் திருடனுக்கு சவால் விடுவதும் சப்தம் ஏதாவது கேட்டால் ஓடிவருவதுமாக இருந்தோம்,

இறுதியில் வெளித்திண்ணையில் எல்லோரும் உட்கார்ந்து என்னசெய்வதென்றுலோசித்தோம். எங்கள் சதுரத்திண்ணைமகாநாட்டில் மூதல் முதலாகக்கொண்டு வரப்பட்டதீர்மானம்பொலிசைக் கூட்டிவரலாம் என்பதுதான். பாமினிகொண்டு வந்த இந்தத்தீர்மானத்தை கோபால் ஆமோதித்தான்.

"இந்த யோசனை முன்பே வந்திருக்கலாமே'' என்று அடுத்தவீட்டு மாமி கேட்டாள்.

''என்ன இருந்தாலும் பெண்புத்தி பின் புத்திதானே'' என்று சொல்லி வைத்தபோது பாமினியின் முகம் எட்டுக்கோணலாய்ச் சுளித்தது. மணியன் பொலிஸ் ஸ்டேஷனை நோக்கிச்சைக்கிளில் பறந்தான். பொலிஸ் வருவதற்குமுன் இறுதித்தடவையாக எங்கள் நாடகத்தை ஒத்திகை நடத்திவிடலாமென்று எண்ணி எல்லோரும் மறுபடியும் சமயலறைப்பக்கம் செல்ல முடிவு கட்டினோம். ஆனால் இப்போது நிராயுதபாணிகளாயல்ல. பொன்னையா தாத்தா தன் வீட்டிலிருந்து கம்பு, கத்தி, கோடரி, அரிவாள், ஈட்டிக்கோல் ஆகியவற்றை வரவழைத்து ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொன்றைக் கொடுத்தார்.

இப்போது லீலா அக்காவின் தலைமையில் எங்கள் வீரப்படை சமயலறையை நோக்கி அடிவைத்தது. ஆனால் தன் கணவனுக்கு ஓர் ஆபத்தும் வந்துவிடக்கூடாதென்று ரகுநாதனை ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு வந்திருந்தாள் லீலா அக்கா. திரும்பவும் எல்லோரும் எங்களுக்குரிய பாணியில் திருடனுக்குச் சவால் விட்டோம். உள்ளே இருந்து வரும் ஒலியைக் கேட்டு இப்போது யாரும் பயந்து ஓடவில்லை. ஆனால் லீலா அக்காவின் கைகால்கள் மட்டும் நடுங்கிக்கொண்டிருந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம் இறுதியாகப் பொலிஸ்காரர் வாசலில் வந்துநின்ற சப்தம் கேட்டது. நான் ''நமக்கினிப்பயம் ஏது?...'' என்ற பழைய பாடலை உரக்கப் பாடிக்கொண்டே தாழ்ப்பாளைநீக்கிச்சட்டென்று கதவைத் திறந்தேன்.

''சரேல்'' என்று ஓர் உருவம் பாய்ந்து வெளிக்கிளம்பியது. அது லீலா அக்காவின் மேல் விழுந்து அவள் புடவையில்அதன் நகம் சிக்கிக்கொண்டு தத்தளிக்க லீலா அக்கா "நான் செத்தேன்!'' என்று கதறிக்கொண்டே அவ்வுருவத்தை தட்டிவிட்டு, மயக்கம் போட்டுக்கொண்டு விழுந்துவிட்டாள். ஆத்திரமடைந்த அவ்வுருவம் மின்னல்வேகத்தில் ஒவ்வொருவரையும் தாண்டிக்கொண்டு போய் இறுதியில் பாமினியின் முகத்தை தன் கூரிய நகங்களால் பிராண்டிவிட்டு வீட்டு வாசலில் நின்றிருந்த பொலிஸ் 'ஜீப்'பில் போய்க் குதித்தது. எல்லோரும் போட்ட இரைச்சலில் குழந்தை ராஜினியும் விழித்துக்கொண்டு ''வீல் வீல்'' என அழத்தொடங்கிவிட்டாள். இத்தனையும் பத்தே விநாடிக்குள் நடந்துவிட்டபடியால் எல்லோருக்கும் ஒரே பிரமை பிடித்திருந்தது. யாருக்கும் கைகால் ஓடவில்லை; பேசவே நாவெழவில்லை.

பின்பு நிலைமையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு வாசலில் நின்ற போலிஸ் ஜீப்பில் தானே ஆஜரான கைதியைச்சென்று பார்த்தோம். சப் இன்ஸ்பெக்டர் நாங்கள் வேண்டுமென்றே திட்டமிட்டுக் கலாட்டா செய்கிறோம் என்று கோபித்துக்கொள்வாரோ என நாங்கள்மிகவும்அஞ்சினோம். நான் அவருக்கு நடந்த உண்மையை விளக்கிக்கூறலாம் என அருகில் சென்றேன். நாங்கள் வேண்டுமென்றே கலாட்டா செய்கிறோம் என்பதைப்போல அந்த உருவத்தின் கழுத்தில் ''ஏப்ரல் பூல்'' என்று எழுதப்பட்ட சீட்டொன்று கட்டித்தொங்கவிடப்பட்டிருந்தது. அப்போதுதான் அன்று ஏப்ரல் முதல்திகதியென்பது நினைவுக்குவந்தது.

சுட்டெரித்து விடுவது போல எங்கள்மீது பார்வையை வீசிக்கொண்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் அந்தச் சீட்டைப் பார்த்தவுடன் முகத்தின் கடுகடுப்புமாறி ''நல்ல தந்திரம் செய்தீர்கள்'' என்று கூறி எல்லோரையும் பார்த்துச்சிரித்துவிட்டு, ''என் பதினைந்து வருஷ சர்வீசில் இப்படிப்பட்டஒரு திருடனைப் பார்த்தது கிடையாது. இனியும் பார்க்கமுடியாது. ஆனால் உங்கள் எல்லோரது ஞாபகார்த்தமாகவும், என் வேலைக்குக்கிடைத்த வெகுமானமாகவும் நான் இந்தப் பூனையைக் கொண்டுபோய் வளர்க்கட்டுமா?'' என்று கோட்டார்.

''அதற்கென்ன சார், தாராளமாக!'' என்று எல்லோரும்கோரஸ் பாடினோம்.

## ஒருகணமனிதன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் அவனைக் கிண்டினேன்.

''என்ன, சுந்தரம்! உன்ரை அம்மாட்டைப் போறதில்லையே...?''

அவன் கல்லைக்கிளறுவதை விட்டுவிட்டு என்னைப்பார்த்தான்.

''அவளிட்டை ஆர் போறது? எனக்கொரு கலியாணம் செய்துதரச்சொல்லிக் கேட்க, அவ முடியாதாம்...! நான் வீட்டை போறேல்லை...!''

சல்லிக்கல் கும்பிகுறைந்துவிட்டது: இன்னும் சில கடகங்கள் அள்ளினால், முடிந்துவிடும். அவன் கடகத்தைக் கற்குவியலின்மேல் போட்டுவிட்டு என்னைப் பார்த்தான்.

''என்ன, சுந்தரம்?''

''எனக்கொரு கலியாணம் செய்துதாறியளே? நானொரு கலியாணம் செய்ய வேணும்...''

மிகவும் சாதாரணமாகக் கேட்டுவிட்டான்; எவ்வளவு பாரதூரமான விஷயத்தை மிக மிக லேசாகக் கேட்டுவிட்டான்; லூஸ் சுந்தரத்திற்கு இப்படியுமொரு எண்ணமா? அவன் முகத்தைப் பார்த்தேன்—

''அதுக்கென்ன ... செய்தால் போச்சு...?''—நானும் வேடிக்கையாக.

''இந்த மாதம் அருமையான நாளிருக்கு— நல்ல பொம்பிளையாய்ப் பாருங்கோ...சிவப்பா இருக்கவேணும் எப்ப பார்த்துச் சொல்லிறியள்...?''

என்னை அறியாமல் எனக்குச் சிரிப்பு வருகிறது; அவன் நிலைக்காகப் பரிதாபமும் படுகிறேன்.

''அது சரிசுந்தரம், உனக்குக் கல்யாணம் செய்து வைத்தால், குடித்தனம் குடும்பம் என்று வாழ எல்லாம் தெரியுமோ?''

''ஓ— எனக்கு எல்லாந் தெரியும்...?''

''ஒவ்வொருநாளும் ஐவைந்து ரூபா பெஞ்சாதிக்கு உழைத்துக் கொடுப்பியே...?''

''கொடுக்கத்தானே வேணும்...! அப்ப, தாலிக்கு ... அவவுக்குச் சேலைக்கு— எனக்கு ஒரு வேட்டி...சேட் ...உறுலோஸ்... எல்லாத்துக்கும் எவ்வளவு வேணும்? ஐந்நூறு காணும், என்ன?... இன்னும் ஒரு மூண்டு நாலு கடகம் அள்ளினல் முடிஞ்சுடும்..! காசை ஏமாத்தாமல் தந்திடுங்கோ.. ஒரு ஐம்பது சதம் கூடத்தந்திடும்...''

கல்லைக் கொட்டிவிட்டு திரும்பிவந்தான்.

''அப்ப, எப்ப ஒழுங்கு செய்வியள்? நாளையிண்டைக்கு வரட்டே...?''

"கலியாணம் எண்டால், பார்த்துக்கீத்துச் செய்யிறதில்லையே...? நினைச்சோடனை செய்யமுடியாது...!''

''அது சரி — பார்த்துத் தான் செய்யவேணும்...''

எனக்குள் ஒரு குறும்பு.

''அது சரி, சுந்தரம்! நீ கலியாணம் செய்தால் நாங்களும் உன்ரை வீட்டிற்குவரலாம், என்ன?''

நான் கேட்டதன் அர்த்தத்தை அவன் புரிந்து கொண்டான்; ஒரு கணந்தான். மறுகணம் அவன் கையிலிருந்த மண்வெட்டி எப்படி என்னை நோக்கி வந்தது, நானெப்படி விலகினேன் என்று எனக்குத்தெரியாது; மண்வெட்டிசிராய்த்த சிறுகாயம், என் இடது தோளில்.

அவன் வெறியோடு என்னைப் பார்த்தான். குழி விழுந்து, ஒடுங்கிய அவன் விழிகள் கூர்மையான சல்லிக்கற்களாக என்னைக்குத்தின.

பார்வை சுட்டெரித்தது; விறுவிறுவென நடக்கத் தொடங்கினேன்.

''ஏய், சுந்தரம், நில் !''

என் அழைப்பைக் கேட்க அவனில்லை. போய்விட்டான்.

ஏதோ வேடிக்கையாகத் தான் நான் கேட்டேன்; ஆனால், அவன் எனக்கு மண்வெட்டியால் அடித்த அடி வேடிக்கையானதல்ல— மானமுள்ள மனிதன் ஒருவனின் அடி.

(யாவும் கற்பனை)

## யாழ்ப்பாணச்சாமி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பசுவென்பதப்பதியின்
அம்சமுள அத்துவிதங்
கொண்ட
சுத்த நிலைச் சிவன்காண்
பாசம் என்பதப் பசுவைப்
பதிவெளி தெரியா
வண்ணம்
மறைத்தலைக்கும்
மாயை காண்.

### பசு பெற்ற துன்பம்

அருவமாய் நின்ற சிவன்
அநாதியைப் பிரிந்த
தாலே, பசுவைப்
பாச பந்தகள் பற்றி மூடிப்
பற்பல அவத்தை
மேற்பட்டுழன்று
பல நோய், பேய், எமன்,
பஞ்சம், வாது, சூது,
பீடைகள் சூழ,
அலைந்து போக்கப்
பதிகளை வணங்கையில்
அநாதியை நாடா
நின்று ஆதிதொட்டலை
கிருரே.

### நூலின் பண்பு

பதி பசு பாச அசைவு
களாலே, வந்தன பந்த
பூத பூதிக உலகமயம்
அவ்வழிவந்தன தானியம்
பலவும், அவைகளைக் கூட்
டிச் சமைத்துண்ண
வேண்டும்,
சமைக்கும் பாகம் பலவிதம்
கண்டார், காலத்தின்
கோலத்தால் புதுமையும்
சமைப்பர்,
ஆனல், தானியப் பழமை
கள் புதுமையில்லை. செய்
பாக முறைகளில் நாத்திக
புதுமையும் கலக்கும்.


புதுமைகள் நெடுந்தூரம்
விரியவுமாட்டா, வட்ட
மிட்டேயவை பழமை
யைச்சேரும்
உலகம் உருண்டைப் பண்
பாட்டதனல், அசைந்து
புரண்டு உருண்டு
கொண்டேவரும்
நவ நாகரிகம் பெறக் கக
னத்தில் பறந்தாலும்,
அங்கும் புதுவிதப் பூத
பூதிகம் காணுர்
எங்கு சென்ருலும் மத்திய
பூமிதான் தஞ்சமளித்துத்
தார் மிகதருமம்
காட்டும்.

(இந்நூலின் சார்பாகவுள்ள பதிப்புரிமை பொருளுரிமை ஆக்கியோனுக்குரியன)

(தொடரும்)

REGAL--JAFFNA
NOW SHOWING!
GEORGE NADER
IN
SECRET MARK
of
DARTAGNAN
(Totalscope - Eastman Color)

உத்தரவாதத்துடன்
பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்
திரமான றப்பர் பொருட்களை தொகையாக
பெறுவதற்கும்
மிகச்சிறந்த இடம்.
ஜெனரல் இண்டஸ்ரீஸ் லிமிட்,
அத்தியடி, யாழ்ப்பாணம்
காட்சி அறை:
20, ஸ்ரான்லி வீதி போன்: 7024
உங்கள் தேவை! எங்கள் சேவை

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்
சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ்.எஸ். ராஜேந்திரன், கே. ஆர்.விஜயா
நடிக்கும்

கைகொடுத்த தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் கந்தையா நினைவாக மடாலயம் நிறுவத்தீர்மானம்

அச்சுவேலி, சனி

''சமய நம்பிக்கைகுன்றி நாஸ்திகம் தலைவிரித்தாடும் இந்த நாளில் ஈழநாட்டில் தோன்றி சிறப்பாக சிவ நெறிக்கும், பொதுவாகத் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றிய பெருமை இந்நூற்றூண்டில் சேர் கந்தையா வைத்தியநாதனுக்கே உரியதாகும்.''

இவ்வாறு அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய முன்னைநாள் கிராமாதிகாரி திரு. வே. இராமசாமி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

உயர்ந்த பதவி வகித்த சேர் கந்தையா வைத்திநாதன் இறை திருப்பணியில் தோய்ந்து இரவும் பகலும் கேதீஸ்வரநாதர் திருப்பணியில் மூழ்கினூர். நாவலன் கனவை நனவாக்கினூர். கேதீஸ்வரன் என்று எண்ணும்போது சிவமணி அவர்களின் பெயரே யாவர்தம் மனதிலும்தோன்றுகின்றது. அன்னூர் பிரிந்தமை தமிழ் மக்களாகிய எமது தவக்குறைவே.

சைவப்புலவர் திரு. இ. வே. கந்தையா பேசுகையில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் சைவ மக்கள் வாழும் கிராமங்கள் தோறும் திருக்கேதீச்சர ஆலய உபசபைகளை அமைத்து அத்தலத் திருப்பதிகங்களை ஊர்களின் மூலை முடக்குகளில் எல்லாம் அன்பர்களைக் கொண்டு இசையுடன் ஓதவைத்துத் தவப்பெருமையை யாங்கணும் நாட்டி வைத்தார் சேர் கந்தையா வைத்தியநாதன் என்ருர்.

சிவமணிக்கு திருக்கேதீச்சரப் பதியில் ஒரு மடாலயம் எடுக்கப்படல் வேண்டும் எனவும், இவரது வாழ்க்கை வரலாறு ஒரு நூலாக வெளிவரவேண்டும் எனவும் ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஈழத்துச் சைவப் பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் மறைவு குறித்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியர் திரு. மயில்வாகனம் தலைமையில்கூடி அன்னூருக்கு அஞ்சலி செலுத்தினூர்கள். தலைமையாசிரியர் தமது உரையில் சிவமணி அவர்களின் சேவைகளைப் பாராட்டினூர்.

## கார் புரண்டது

கோண்டாவில், சனி

அளவெட்டியிலிருந்துசுண்டிக்குளியைநோக்கிச்சென்றுகொண்டிருந்த காரொன்று இன்றுகாலை கொக்குவில் தபாற்கந்தோருக்கு முன்னுல் தலைகீழாகப் புரண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது மழைகாரணமாக கார் சறுக்கியதாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

திரு. தனபாலசூரியர் என்பவர் காரை ஓட்டிச் சென்றதாகவும் கார் பலத்த சேதத்துக்குள்ளாகிய போதும் காரில் சென்றஎவருக்கும் எதுவித காயமுமேற்படவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுகதை, கவிதைப் போட்டி

## சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி ஈழநாடு

அளிக்கும் வாய்ப்பு

19-9-65-முதல் 25-9-65 வரை நடைபெறும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தின் ஓர் அங்கமாக சிறுகதை, கவிதைப் போட்டியை நடத்துவதற்கு சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரக்குழு ஒழுங்குசெய்துள்ளது.

### நிபந்தனைகள்

(1) இப்போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளும், கவிதைகளும் சமூகத்தில் வித்தியாசத்தால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் கருத்துடையனவாக இருக்கவேண்டும்.

(2) போட்டிக்குரிய கதைகளும், கவிதைகளும் 24-9-65-ந் திகதிக்கு முன்னர் சிறுகதை, கவிதைப் போட்டி, ஆசிரியர், ஈழநாடு, த பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) இப்போட்டியின் முடிவு சம்பந்தமாக ஈழநாடு ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

(4) சிறுகதையும், கவிதையும் தனிப்பட்ட எவரையும் தாக்குவதாக இருக்கக்கூடாது.

### பரிசுகள்

பரிசுக்குரிய சிறுகதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும், பரிசுக்குரிய கவிதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும் வழங்கப்படும்

போட்டியில். தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளும், கவிதைகளும் ஈழநாடு வாரப்பதிப்பில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் பின்வரும் கூப்பனை நிரப்பி தாம் அனுப்பும் சிறுகதை, கவிதையுடன் அனுப்பவேண்டும்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு

சிறுகதை, கவிதைப் போட்டி

பெயர்: ______________________

விலாசம்; ______________________

கதை / கவிதை (தலைப்பு)

## ஏழைவிவசாயிகளுக்கு விதைநெல்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி குடியேற்றப் பகுதியில் உள்ள ஏழைக் கமக்காரர்களுக்கு இந்தக் காலபோகத்துக்கு விதைக்க விதைநெல் பலநோக்குச் சங்கங்கள்மூலம் கடனுகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் விதைநெல் நிவாரணமாக பணஉதவிதர முன்வந்தால் பலநோக்குச் சங்கத்தில்உள்ள கடன் கழிக்கப்படும்'' என யாழ்ப்பாணம் தெற்கு கூட்டுறவு ஆக்கத் துணைஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி நேற்று பரந்தனில் நடைபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்களின் பயிற்சி முகாமில் கூறினூர்.

உருத்திரபுரம் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க செயலாளர் திரு. பொ. அப்புத்துரை கடந்த மூன்று போகங்களில் நெல் வேளாண்மை அழிந்தபடியாலும் புயலினுல் மக்கள் பாதிக்கப்பட்டபடியாலும் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அரசாங்கத்திடம் விதைநெல்லுப் பெற்றுத்தர முடியுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. மு. சின்னத்தம்பிமேற்கண்டவாறு கூறினூர். திரு. பொ. அப்புத்துரை கமத்தொழில் அதிகாரி திரு. எஸ். கனகரத்தினத்திடம் 'குடியேற்றப்பகுதியில் உருளைக்கிழங்கு முதலிய உபஉணவுகளை உற்பத்தி செய்வதற்காக அரசாங்கம் மேலும் ஒரு கிணறு வெட்ட உதவி செய்யவேண்டுமென்றும், இருக்கும் கிணறு போதாதெனவும் தெரிவித்தார். கமத்தொழில் அதிகாரி இந்தக் கோரிக்கை ஆராயப்படும் எனத் தெரிவித்தார்.

குடியேற்றப் பகுதிகளில் மரவரியை ஒழிக்கவேண்டும் என்றும் புதிய இடங்களில் மரவரிக்கு அனுமதிக்கக் கூடாதுஎன்றகருத்து பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது. கரைச்சிப்பகுதி கிராம முன்னேற்றச்சங்க சமாசம் ஏற்கனவே குடியேற்றப் பகுதியில் இருந்து மரவரியை அறவே நீக்கிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## 6,000 பேர் தற்போது சிறையிலிருக்கிருர்கள்

பம்பலப்பிட்டி, சனி

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் சென்ற வருடத்தைவிட இந்த வருடமும் அதிக கைதிகள் இருப்பதாகவும் இது அரசாங்கத்துக்கு மேலும் செலவை உண்டுபண்ணியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 6,284 கைதிகள் சிறையிலிருக்கிருர்கள்.

## குடும்பக்கட்டுப்பாடு: மந்திரி ஆராய்வார்

பம்பலப்பிட்டி, சனி

சுகாதாரமந்திரி திரு. எம். டி. ஏச். ஜெயவர்த்தன குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஆராய்வதற்காக அடுத்த வாரம் நடுப்பகுதியில் சுவீடனுக்குச்செல்லவிருக்கிருர். மந்திரி இலங்கை திரும்பியதும் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டத்தை நாடு பூராவும் பரப்ப நடவடிக்கை மேற்கொள்வாரெனஅறியப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்கள் அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தென்மராட்சியில் நடைபெறவிருக்கும் சைவ மகாநாடு

கைதடி, சனி

இம்மாதம் 24-ம் திகதி தொடக்கம் 27-ம் திகதி வரை நான்கு நாட்களுக்கு சைவ மகாநாடு கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை, நாவற்குழி மகாவித்தியாலயம், மறவன் புலோ சகல கலாவல்லி வித்தியாசாலை ஆகிய இடங்களில் விமரிசையாக நடைபெறவிருக்கிறது. கைதடியில் இரு நாட்கள் நிகழ்ச்சியில், முதல் நாள் அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. இ. கந்தையா தலைமையில் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க ஈழத்து அறிஞர்களின் விரிவுரைகள், ஐயந்தெளிதல் நிகழ்ச்சி, பரிசில் வழங்கல் ஆதியன இடம் பெறும். இரண்டாம்நாள் உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம் தலைமையில் தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ, சிதம்பரப்பிள்ளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க விரிவுரைகள், ஐயந் தெளிதல் நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சி ஆதியன இடம்பெறும் மூன்றும் நாள் நாவற்குழியில் கோப்பாய் எம் பி திரு சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் யாழ்ப்பாண மேயர் திரு எஸ். சி மகாதேவா மங்கல விளக்கேற்றி வைக்க விரிவுரைகள், ஐயந்தெளிதல் நிகழ்ச்சி, கலைநிகழ்ச்சி ஆதியன நடைபெறும்.

நான்காம் நாள் மறவன் புலோவில் சைவப்பெரியார் குமாரசாமிப்புலவர் தலைமையில் யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க விரிவுரைகள், கலைநிகழ்ச்சி ஆதியன நடைபெறும்.

நான்கு நாட்களும் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். திரு. குமாரசாமிப்புலவர், திருவாளர்கள் நா. பொன்னம்பலம், சி. சரவணமுத்து ஆகியோருக்கு மகாநாட்டில் ஆலய பிரசாரகர் என்னும் பட்டம் வழங்கப்படவிருக்கிறது இம் மகாநாட்டையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது

கைதடி இந்து வாலிபர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச்செய்துள்ளது

## உலக யுத்தமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தக்கூடும் இந்தச் சூழ்நிலை ஏற்படும்பட்சத்தில் இலங்கை சில நாடுகளின் கவனத்துக்குள்ளாகலாமெனக் கருதப்படுகிறது

சித்கிம் எல்லைத் தகராறை சீனுகொண்டுவந்து இந்தியாவைப் பயமுறுத்தியிருப்பது இத்திய-பாகிஸ்தான் எல்லைக்கோடுகளில்குவிக்கப்பட்டிருக்கும் இந்திய ராணுவத்தினரை சிக்கிம் பகுதிக்குக்கொண்டுவருவதன்மூலம் பாகிஸ்தானுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கலாமெனவும் ராணுவ அதிகாரிகள் கருதுகிருர்கள் இதே சமயத்தில் இரண்டாவது உலக யுத்தத்தின்போது ராணுவ நடவடிக்கைகளில் அனுபவம் வாய்ந்த டிகாலுடைய அரசாங்கமும் இது குறித்து அக்கறை கொண்டுள்ளது இது நிலைமை மோசமாவதையே தெரிவிப்பதாக உலக அவதானிகள் வர்ணித்துள்ளனர்.

எந்த நிலையிலும் இலங்கை அரசாங்கம் நடுநிலைக்கொள்கையைக் கடைப்பிடிக்கும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது ஆனுல் சீனுவின் நடவடிக்கையை எதிர்த்து அது கம்யூனிஸ நடவடிக்கையாக இருக்குமானுல்இலங்கை எவ்விதப் பாதையைப் பின்பற்றும் என்பதுகுறித்துதிட்டவட்டமாக இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை

## புதிய பஸ்சேவை

கிளிநொச்சி, சனி

அடுத்தவார இறுதியில் கிளிநொச்சியிலிருந்து அக்கராயனுக்கு புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. கோயில் வயலிலிருந்து எழுதுமட்டுவாளுக்கு அடுத்த மாதம் பஸ் சேவை ஆரம்பமாகும்.

இதுவரைமன்னூர் பஸ் டிப்போவின் பொறுப்பிலிருந்து வந்த பூநகரி—மன்னூர் பஸ் சேவை அடுத்தமாதத்திலிருந்து கிளிநொச்சி உப டிப்போவின் பொறுப்பில்இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இ. போ. ச. அதிகாரிகளுடன் கிளிநொச்சி எம். பி. தொடர்புகொண்டதன் பேரிலேயே இப்புதிய பஸ் சேவைகள் நடத்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

## லாபத்தில் தொழிலாளர் பங்கு

### ஆராய 7 பேர் கொண்ட கமிஷன்

பம்பலப்பிட்டி, சனி

தொழிலாளர்கள் தாம் கடமைபுரியும் தொழில்நிலையங்களின் லாபத்தில் பங்கு கொள்ளும் திட்டம்சம்பந்தமாக 7 பேர் கொண்ட கமிஷன் ஆராயப்படவிருக்கிறது.

ஒய்வுபெற்ற தொழில் கமிஷனர் திரு. எம். ராஜநாயகத்தைத் தலைவராகக் கொண்ட இந்தக் கமிஷனில் தொழில் கமிஷனர் திரு. என். எல். அபயவீரா, இலங்கை வங்கி ஜெனரல் மனேஜர் திரு. வி. லோகநாதன், திரு. சி. சி. மாத்யூ, திரு. எஸ். எஸ். பெரேரா, ஜனுப் ஏ ஐ எம் மாக்கார், திரு. எம் எஸ் பக்மீவீவா

## தமிழ்விழா

கொஸ்லாந்தை, ஞாயிறு

மலையக கல்விச்சபையின் முதலாவது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு இம்மாதம் 26-ம் திகதி கொட்டகலை மும்மொழிகலாமன்ற மண்டபத்தில் தமிழ்விழா கொண்டாடப் படவிருக்கிறது.

இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு நியமன எம். பி.க்களான திருவாளர்கள் எஸ். தொண்டமான், வி. அண்ணமலை ஆகியோருக்கும் மஸ்கெலியா, நாவலப்பிட்டி, கொத்மலை ஆகிய தொகுதிகளின் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மலையக தனியார் பாடசாலைகளின் மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறவிருக்கிறது.

### விற்பனைக்கு

இரு பெட்போர்ட் வான்கள் (1 ஸ்ரீ 791, 33ஸ்ரீ 1865 இலக்கமுடையவை) ஒரு அட்லஸ் பிரயாணிகள் வான் (4 ஸ்ரீ 1088 இலக்கமுடையது) விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். பிறவுண் & கம்பனி லிமிடெட், பரந்தன். 1049

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org